குமைனியின் சிந்தனைகள்.

M.B.M. இஸ்மாயில் (ஸலாமி) BA. Hons (Madeena)
Dip.in. psycho social intervention (ippsw-s)

வெளியீடு:

அல்ஹிக்மா நலன் புரிச் சங்கம், கொழும்பு

BIBLIOGRAPHY

Copy Right : Reserved

Author : M.B.M. Ismail (Madani)

Title : Komainiyin sinthanaikal

Subject : History

Language : Tamil

Number of Copies :2000

Number of Pages : 72

Size : 1/16

1st Edition : 2015.12.10
2nd Edition : 2015.01.10

Publisher: ALHIKMA WELFARE ASSOCIATION- COLOMBO

உட்பதிந்தவை.

ஆசியுரை.//04
அணிந்துரை.//06
மதிப்புரை.//08
முன்னுரை.//09
குமைனி வாழ்க்கைச் சுருக்கம்.//11
எல்லை மீறிய ஷீஆக்கள்.//14
குமைனி பற்றி இஸ்லாமிய அறிஞர்கள்.//16
அல்லாஹ் பற்றிய நம்பிக்கை.//18
நபி (ஸல்) அவர்கள் அவர்கள் பற்றிய நம்பிக்கை.//20
அல்குர்ஆன்.//28
வஹி.//31
ஸஹாபாக்கள்.//32
கலீபாக்கள்.//36
ஷீஆக்களின் இமாம்கள்.//38
முஸ்லிம்கள்.//50
க.்.பதுல்லாஹ்வும் குமைனியும்.//57
குமைனியின் அபூர்வ சட்டங்கள்.//59
குமைனி எனும் சர்வாதிகாரி.//65
ஏமாற்றப்படுகிறார்கள்.//68
உள்ளத்திலிருப்பவை இதை விட அதிகம்.//69
அன்பான வேண்டுகோள்.//70

جمعية علماء سريلانكا
සමස්ථ ලංකා ජම්ඉයියතුල් උලමා
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA
(Incorporated by Act of Parliament No.: 51 of 2000)
இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் சபை / ඉස්ලාම් ආගමික විද්වතුන්ගේ සංගමය / COUNCIL OF MUSLIM THEOLOGIANS

அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா கல்குடாக் கிளையின் தலைவர்.

அஷ்ஷெய்க் எம்.எம்.எம். தாஹிர் (ஹாமி) அவர்கள் வழங்கிய

ஆசியுரை.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம். அல்லாஹ் ஒருவனுக்கே எல்லாப் புகழும் அல்-ஹம்துலில்லாஹ். சாந்தியும் சமாதானமும் நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களைப் பின்பற்றி வாழ்ந்த நன் மக்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

“குமைனியின் சிந்தனைகள்” எனும் இந்நூல் காலத்தின் தேவையாக அமைந்த மிகவும் பொருத்தமான பயனுள்ள ஒரு முயற்சியாகும். இன்று உலகளாவிய முஸ்லிம் சமூகம் ஆயுத, சிந்தனா ரீதியான பல்வேறு போராட்டங்களையும், சவால்களையும் சந்தித்து வருகின்றமை கசப்பான உண்மையாகும். இவற்றில் ஒன்றாகவே ஷீஆ சிந்தனையும் அதன் வேகமான பரவலும் நோக்கப்படுகின்றது.

வழிகெட்ட ஷீஆ சிந்தனைகளையும் அச்சிந்தனைகளை விதைக்கும் அவர்களது தலைவர்களையும் குறிப்பாக அவர்களது ஆன்மீக வழிகாட்டியாகவும், பெருந் தலைவராகவும் அவர்களால் கருதப்படும் கொமைனியின் சிந்தனைகளை தூய இஸ்லாமிய சிந்தனையின் நிழலில் நின்று மக்களுக்கு தெளிவுபடுத்துவதும் விமர்சிப்பதும் இன்றைய இலங்கை த.்.வாக் களத்தில் செய்யப்படவேண்டிய மிக முக்கியமானதொரு பணியாக கருதுகின்றேன்.

ஏனெனில் இலங்கையில் முஸ்லிம் கிராமங்களில் நிலவும் வறுமை, இஸ்லாம் பற்றிய அறிவின்மை இன்னும் பல காரணங்களைப்

பயன்படுத்தி இவ்வழிகெட்ட சிந்தனையைப் பரப்ப பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதில் நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். ஏனெனில் இது எமது ஈமானைப் பாழாக்கும் முயற்சியாகும்.

தூய அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையுடன் வாழும் நமது நாட்டு முஸ்லிம்கள் மத்தியில் இவ்வழிகெட்ட கொள்கையைப் பரப்பி குழப்பங்களை தோற்றுவிக்க முயலும் குறித்த சிந்தனைப்பிரிவினர் இதனால் எதை அடைய முயற்சிக்கின்றனர்? இது போன்ற வினாக்களுக்கு இந்நூலை வாசிப்பதன் மூலம் தெளிவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, இந்நூலை சிறந்த ஆய்வு, தேடலினூடாக நமது சமூகத்திற்கு வழங்கிய சகோதரர் அஷ்ஷெய்க். M.B.M. இஸ்மாயில் (மதனி) அவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக. அவர் தொடர்ந்தும் இப்பணியில் உழைக்க ஊக்கத்தையும் ஆரோக்கியத்தையும் வழங்குவானாக எனப் பிரார்த்திக்கின்றேன்.

08.08.2015

JDIK நிறுவனத்தின் பொதுத்தலைவர்

அஷ்ஷெய்க் ஏ.எல். பீர்முஹம்மது (காஸிமி) அவர்கள்
வழங்கிய

அணிந்துரை.

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பம் செய்கின்றேன். அஷ்ஷெய்க் எம்.பீ.எம். இஸ்மாயில் (மதனி) அர்களின் “குமைனியின் சிந்தனைகள்” என்ற நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நவீன ஷீஆ இஸத்தின் வளர்ச்சியில் குமைனியின் பங்கு அளப்பரியது. மன்னர் ஷாவுக்கு எதிரான குமைனியப் புரட்சியின் வெற்றி இதற்கு பெரும்பங்களிப்புச் செய்தது. முஸ்லிம் சமூகத்தின் ஹீரோவாகவும் ஆன்மீகத் தலைவராகவும் அவர் பார்க்கப்பட்டார். அமெரிக்காவுக்கு எதிரானதும் மேற்குலகுக்கு எதிரானதுமான அவரது கோசங்கள் முஸ்லிம் சமுகத்திலிருந்த புரட்சி சிந்தனையாளர்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்றன. இஸ்லாமிய அடையாளங்களை வெளிப்படுத்தும் அவரது கோலம் மார்க்க அறிவில்லாத பாமரர்களை வெகுவாகக் கவர்ந்தது, ஆனால் எவரும் அவரது இஸ்லாமிய விரோதப் போக்குகளையோ கருத்துக்களையோ, தகிய்யா எனும் அவரது நடிப்பையோ கவனத்திற் கொள்ளவில்லை. இவை மார்க்க அறிவற்ற, கொள்கைத் தெளிவில்லாத முஸ்லிம்கள் மத்தியில் ஷீஆ இஸம் ஊடுருவக் காரணமாயிற்று.

ஷீஆக்களின் ஆன்மீகத் தலைவராகக் கருதப்படும் குமைனி ஷீஆ வழிகெட்ட கொள்கையில் எந்த வகையிலும் குறைந்தவரல்ல. அவர்களது இமாம்கள், அறிஞர்கள் எனக் கருதப்படுவோர் பலரை வழிகேட்டில் மிஞ்சிவிட்ட ஒருவராகவே கருதப்படுகின்றார். அந்த அளவுக்கு அவரது வழிகெட்ட சிந்தனைகள் மிகவும் பாரதூரமானவை. குமைனியின் கருத்துக்கள், சிந்தனைகள் வழிகேடோ, இறை நிராகரிப்போ இல்லை என்றால் உலகில் குப்ரும் இல்லை, வழிகேடும் இல்லை எனும் அளவுக்கு அவரது வழிகேடுகளும் குப்ரிய சிந்தனைகளும் மிகப்பயங்கரமானவை. இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கு வேட்டு வைப்பவை. அஷ்ஷெய்க் எம்.பீ.எம்.இஸ்மாயில் (மதனி) அவர்களின் இத்தொகுப்பு இதற்கு சிறந்த சான்று.

மார்க்க அறிவு இல்லாமலும் கொள்கைத் தெளிவில்லாமலும் ஷீஆக்களின் ‘தகிய்யா’ நடிப்பில் மயங்கிக் கிடப்போர் தங்களது அபிப்பிராயங்களை மீள் பரிசீலனை செய்ய இத்தொகுப்பு பயனளிக்கும் என நம்புகின்றேன். சில வேளை இந்நூலைப் படிக்கும் ஷீஆக் கொள்கைத் தெளிவற்றோர் இமாம்(?) குமைனி இப்படியெல்லாம் சொல்லியிருப்பாரா? இவர்கள் வேண்டு மென்றே இட்டுக்கட்டிச் சொல்கிறார்கள் என நினைக்கக் கூடும். நமது பிரதேச ஷீஆ முன்னணிப் பிரச்சாரகர்களும் அப்படித்தான் கூறி உங்களைத் திசை திருப்பவும் உங்களது அனுதாபங்களைப் பெறவும் முயற்சிப்பார்கள். உண்மையில் M.B.M. இஸ்மாயில் (மதனி) அவர்கள் குறிப்பிட்டிருப்பது போல் இந்நூலில் குமைனியின் வழிகேடுகள் அனைத்தும் கொடுக்கப்படவில்லை. அவற்றை முழுமைப்படுத்த பல வல்யூம்கள் தேவைப்படும்.

இந்நூலை அனைவரும் வாசித்து ஷீஆக்களின் ஆன்மீகத்தலைவரான குமைனியின் வழிகேடுகளைத் தெரிந்துகொள்வதுடன் ஷீஆக்கள் விசயத்தில் மிகுந்த விழிப்புடன் செயற்படுமாறும் கேட்டுக்கொள்கிறேன். ஷீஆக்களின் வழிகேடுகள், குப்ருகள் குறித்து அதிகம் பேசியும் எழுதியும் வரும் இஸ்மாயில் (மதனி) அவர்களது பணி தொடரவும் அவரது இம்முயற்சிகளை அவனது தீனுக்காகப் பொருந்திக் கொண்டு நற்கூலி வழங்கவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஏ.எல். பீர்முஹம்மது (காஸிமி) M.A

பொதுத் தலைவர், ஜம்இய்யதுத் த.ீவதில் இஸ்லாமிய்யா - கல்குடா

09.08.2015

கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் துறைத் தலைவர்

அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். றிஸ்வி (மஜீதி) அவர்கள் வழங்கிய

மதிப்புரை.

புகழ்யாவும் நேர்வழியையும், சத்தி மார்க்கத்தையும் தந்த அல்லாஹ்வுக்கே. ஸலவாத்தும் ஸலாமும் எந்த நேர்வழியையும், சத்திய மார்க்கத்தையும் கொடுத்து அனுப்பி வைப்பட்டார்களோ அவர்களான இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தவர்கள், தோழர்கள் அனைவர் மீதும் உரித்தாக பிரார்த்திக்கிறேன்.

c yfpy;toopNfLk;njspthdJ> NeHtopAk;njspthdJ. mit ,USk;xspAk;Nghy>,uTk;gfYk;Nghy>FULk;ghHtAk;Nghy vdgJ Gjjpaii lNahHGupe;J nfhs;s NghJkhdJ.,] ;yhkpa tuyhw;wp;jhDk;topnfIL(ohy;) gpwi uAk;topnfLjNjhH(Kopy;) gyH\PMff;spd;tsHr;rpaYk;>vOrr;rpaYk;mg;Jyyh`;,gD] gh Kjy;,d;W tiu fhyh fhyk;jdpg;gIl; rpej;idahsHfshfTk;>mur mjpfhuk;>jiyikj;Jtk;>rkaj; jiyikj;Jtk;cilatHfshfTk;cUthfp\PM ,]jjpwF cUNtwwp>cu%Ib tpL kuzpjtHfs;gyH ghtk;,jid Gupe;J nfhs;Sk;MwwYk;>mwpTk;,yyhjtHfs;myyJ mit ,Ue;Jk;njspilie;J NeHtopeIff;hky;gpbtHjkhf cs;stHfs; \PM vdw topnfII tiyf;Fs;rpf;Fz;L jtpf;fpd;whHfs; mtHfSf;F ,jjkpo;nkhop%y E}yhtJ njspit Ak;NeHtopiaAk;VwgLjj NtzLk;vd gpuhHjjpf;fpd;Nwd;

m\;n\af; M.B.M. இஸ்மாயில் (மதனி) அவர்கள் வழிகெட்ட கொள்கைகள், சிந்தனைகளுக்கு எதிராக பேசியும், எழுதியும் வருபவர். தைரியமிக்க ஒரு தாயி. அந்த வகையில் பந்நூல் ஆசிரியரான இவர் எமது கரத்திற்கு தந்துள்ள “குமைனியின் சிந்தனைகள்” என்ற இந்நூல் பல செய்திகளை குமைனி பற்றி அம்பலப்படுத்துகிறது. படியுங்கள், சிந்தியுங்கள், எழுத்தாளருக்காகப் பிரார்த்தியுங்கள். என்றும் எனது வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும் அவருக்காக உரித்தாகட்டும்.

“நும்ருதுகளின் நெருப்புக் கிடங்குகளை அணைக்க
இப்றாஹீம்களின் குரல்கள் ஒளிரட்டும்.” 10.08.2015

முன்னுரை

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயரால், சாந்தியும் சமாதானமும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் வாழ்க்கையை பின்பற்றி வாழ்ந்த வாழ்கின்ற அனைவர் மீதும் உண்டாவதாக ஆமீன்.

ஊடகப்போர் நடைபெற்றுவரும் இந்தக்காலத்தில் முஸ்லிம்கள் தங்களின் எதிரிகளை தலைவர்களாகவும் தலைவர்களை எதிரிகளாகவும் நினைத்துள்ளனர். வெளியிலிருக்கும் நமது எதிரிகளைக் காட்டிலும் உள்ளிருக்கும் எதிரிகளே ஆபத்தானவர்கள். வெளியில் இருக்கும் எதிரிகளை இலகுவில் அழிப்பதற்கான திட்டங்களை தீட்டினாலும் அவற்றை எதிரிகளுக்கு கடத்துகின்றவர்களாகவும் உள்ளிருந்து கறையான் போல் அரித்து எதிரிகளுக்கு களத்தை தயாரிக்கும் பணியிலும் உள்ளிருப்பவர்கள் ஈடுபடுவார்கள். இதனால்தான் அல்லாஹ் ‘‘நயவஞ்சகர்கள் நரகத்தின் அடித்தளத்தில் இருப்பார்கள்’’ என்று குறிப்பிடுகிறான்.

ஷீஆக்கள் மற்றும் அவர்களின் தலைவர்களின் விபரீதமான கொள்கைகள் அண்மைக்காலமாகவே நமது சமுதாயத்தில் பரவி வருகிறது இடத்திற்கேற்ப நடித்து, பொய் சொல்லி மக்களை ஏமாற்றுவதில் பிறந்து, அதிலேயே வளர்ந்திருக்கும் ஷீஆக்கள் தங்களின் கொள்கைகளை நாசுக்காக விதைப்பதில் வெற்றி கண்டுவருகிறார்களோ என்று நினைக்குமளவுக்கு நிலமை மோசமாக உள்ளது. இதனால் முன்பிருந்ததைவிட அதிகமாக இலங்கையின் சகல அமைப்புக்களும் ஜம்இய்யதுல் உலமாவும் விளித்துக்கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

ஷீஆக்களின் உண்மை நிலை, அவர்களின் தலைவர்களின் வழிகெட்ட சிந்தனைகளை விளக்கும் பல நூல்கள் அரபு மொழியிலும் ஏனைய மொழிகளிலும் இருந்த போதிலும் தமிழ் மொழியில் இல்லாதிருப்பது மிகப்பெரும் குறையாகவுள்ளது. இதனைக்கருத்தில்

கொண்டே இக்கால மக்களின் தேவையை உணர்ந்ததன் அடிப்படையில் இந்நூலை எழுதுவதற்கு அல்லாஹ் எனக்கு வாய்ப்பளித்துள்ளான். அல்ஹம்துலில்லாஹ்.

குமைனியின் உண்மை நிலையை எல்லோரும் சந்தேகமில்லாமல் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும், அண்மைக்காலமாக ஷீஆக்கள் அவர்களைப் பற்றி படிப்பதற்கு அவர்கள் எழுதிய நூல்களை வாசிக்குமாறு பிரச்சாரம் செய்துவருவதற்கு ஏற்பவும் இந்நூலில் முழுமையாக குமைனியின் நூல்களில் இருந்தே அவரது கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நூலின் மூலம் முஸ்லிம்கள் தங்களின் மார்க்கத்தை யாரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கு அப்பால் யாரிடமிருந்து பெறக்கூடாது என்பதைப் புரிந்து கொண்டால் அதுவே அல்லாஹ் செய்த மிகப்பெரிய அருளாக அமைந்துவிடும்.

இறுதியாக இந்நூலை எழுதுவதற்கு கபூல் செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் அல்ஹம்துலில்லாஹ். இந்நூலை திருத்தி ஆக்கப்படுத்திய சகோதரர்கள், அட்டை வடிவமைத்த சகோதரர், ஆலோசனை வழங்கியோர், அச்சிட்டோர், அதற்கு உதவிசெய்தோர், இந்நூலை வாசிக்கும் உங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அல்லாஹ் எம் அனைவருக்கும் அவனது மேலான சுவர்க்கத்தை நஸீபாக்குவானாக. ஆமீன்.

, eE}y py ;Vj ht J j t Wfis eP;fs ;fz ;hy ;mij cqf;s ;
r Nf hj ud hf pa vd ;D I d ;gf pHe;J nf hs ;s kwe;J t pl hj Pf s ;

M.B.M. இஸ்மாயில் (மதனி)
அதிபர்,
தாறுஸ்ஸலாம் அரபுக்கலாபீடம்.
தியாவட்டுவான், வாழைச்சேனை.
17.07.2015

குமைனி வாழ்க்கைச் சுருக்கம்.

கி.பி.1902 டிசம்பர் மாதம் 24ம் நாள் பிறந்த அஹ்மத் அல் குமைனி இந்திய வம்சாவழியாவார். இவரை ஷீஆக்கள் ரூஹுல்லாஹ் என்றும் ஆயத்துல்லாஹ் என்றும் அழைக்கின்றனர். இந்திய வம்சாவழியான இவரது பாட்டனார் அஹ்மத் அல் மூஸவி ஈராக்கில் இருக்கும் ஷீஆக்களின் முக்கிய நகரமான நஜப் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்தார். பின்பு 1839ல் ஈரானின் குமைன் பிரதேசத்திற்கு சென்று அங்கேயே திருமணம் செய்து தங்கினார் இதில் அவருக்கு மூன்று பெண் குழந்தைகளும் மூன்று ஆண் குழந்தைகளும் பிறந்தனர். இவர்களில் குமைனியின் தந்தை முஸ்தபா என்பவரும் ஒருவர். முஸ்தபாவும் ஷீஆ அறிஞர்களில் ஒருவரான மீர்ஸா அஹ்மதின் மகள் ஹாஜரும் 1882ல் திருமணம் செய்தார்கள் இவர்கள் இருவருக்கும் மகனாக அஹ்மத் அல்-குமைனி பிறந்தார்.

(ஷீஆக்களின் அறிஞரான மூஸா அல் மூஸவி அவர்கள் தனது "அல்ஜும்ஹுாரிய்யா அத்தானியா" என்ற நூலில் 352ம் பக்கத்தில் குமைனியின் வரலாற்றை பின்வருமாறு எழுதியுள்ளார்.

"ஸின்ஹா என்று அழைக்கப்பட்ட குமைனியின் தந்தை முஸ்தபா 1842ல் கஷ்மீரில் ஒரு செல்வந்த குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை ஒரு மது வியாபாரியாக இருந்தார். ஆங்கிலேயர்களுடன் நெருங்கிய உறவு அவருக்கிருந்தது.

ஸின்ஹா முஸ்லிம் வியாபாரிகளில் ஒருவரின் மகளான தாஹிராவுடன் அறிமுகமானார். அவளை மணப்பதற்கு விரும்பினார். அவளது குடும்பத்தை அச்சுறுத்தி தாஹிராவுடன் ஓடிவிட்டார்." இந்தத் தகவலை மூஸா அல் மூஸவி அவர்கள் காஷ்மீரில் உள்ள ஷீஆ அறிஞர்களிடமிருந்து பெற்றதாகக் குறிப்பிடுகிறார்.)

குமைனியின் தந்தை ஷீஆக்களிடம் அறிஞராகவும் மேதையாகவும் மதிக்கப்படுபவர். ஷீஆக்களின் வழிகாட்டியாக இருந்த இவர்

ஈரானின் அப்போதைய ஆட்சியாளரால் கொலை செய்யப்பட்டார். குழந்தையாக இருக்கும்போதே தன் தந்தையை இழந்த குமைனி தன் தாயிடம் வளர்ந்தார். நஜப், கும் போன்ற இடங்களில் ஷீஆக் கொள்கையைக் கற்றுத் தேறிய அவர். பல ஆண்டுகள் ஆசிரியராகவும கடமையாற்றினார். ஷீஆக் கொள்கையில் தீர்ப்புச் சொல்லும் அதிகாரமும், புதிதாக எழும் பிரச்சினைகளுக்கு பத்வாச் சொல்லும் வல்லமையையும் இவர் பெற்றிருப்பதாக ஷீஆ அறிஞர்கள் கருதியதனால் "ஆயத்துல்லாஹ் அல் உழ்மா" எனும் உயர்ந்த பட்டத்தைக் கொடுத்து அவரை கௌரவித்தனர்.

தன் தந்தை ஈரானிய அரசரால்தான் கொலை செய்யப்பட்டார் என்ற உணர்வுடன் வளர்ந்த குமைனி அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவந்தார். இதனால் மன்னர் ஷாஹ் முஹம்மத் ரிழா அல்பஹ்லவி என்பவரால் கைது செய்யப்பட்டு சிறுது காலம் சிறையில் அடைக்கப்பட்டு பின்பு விடுதலை பெற்றார்.

மன்னர் ஷாவின் ஆட்சியில் நடந்துவந்த கொடுமைகள், சர்வாதிகாரம் என்பவற்றுக்கு எதிராக தொடர்ந்தும் குரல்கொடுத்து வந்த குமைனி மக்களின் ஆதரவைத் திரட்டினார். தனது பொய்யான வாக்குறுதிகள் மற்றும் தன் சீடர்களின் தந்திரமான பிரச்சாரத்தின் மூலம் அஹ்லுஸ் ஸுன்னாக்களின் ஆதரவையும் பெற்றார். ஒரு கட்டத்தில் அஹ்லுஸ் ஸுன்னாக்களின் ஆதரவு இல்லை என்றால் குமைனி வெற்றி கண்டிருக்க மாட்டார் எனும் அளவுக்கு அவருக்கு முழுமையான ஆதரவை அஹ்லுஸ்ஸுன்னாக்கள் அவருக்கு வழங்கினார்கள். அவர் வெற்றி பெற்றால் சகல உரிமைகளும் பெற்று நாம் சந்தோசமாக வாழ்வோம் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் சட்டியிலிருந்து அடுப்பில் வீழ்ந்திருக்கிறோம் என்பது குமைனி வெற்றி பெற்ற பின்புதான் அஹ்லுஸ் ஸுன்னாக்களுக்குத் தெரிந்தது.

மன்னர் ஷாவுக்கு எதிராக இருந்த அனைவரையும் அரவணைத்துக் கொண்டு செயல்பட்ட குமைனி அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன்

ரகசியமாகப் பேணிவந்த உறவுகளின் மூலம் 1979.02.11ல் வெற்றி பெற்று ஈரானின் ஆட்சி பீடம் ஏறினார். ஈரானிய ஆட்சியில் மன்னர் ஷாவை விடவும் தீவிரவாதக் கொள்கைகளைக் கடைப்பிடித்து ஷீஆக்களுக்கு முழுமையான சார்புக்கொள்கையில் ஆட்சியை வழிநடாத்தினார். ஈரானின் பல துறைகளிலும் மாற்றத்தைக் கொண்டுவந்தார்.

ஷீஆக்களிடம் ஆன்மீக குருவாகவும் சிலபோது தங்களின் இமாம்களை விட சிறந்தவராகவும் மதிக்கப்படும் குமைனி ஷீஆக்களுக்காக பல நூல்களை எழுதியுள்ளார். (அதில் சிலவற்றிலிருந்த சில தகவல்களே இப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.) குமைனி எழுதிய நூல்கள் தவிரவும் அவ்வப்போது அவர் சொன்ன கருத்துக்கள், எழுதிய கடிதங்கள், நாட்குறிப்புகள், உரையாடல்கள் என்பவற்றை ஆய்வு செய்து நூலுருப்படுத்தவும், அவரது நூல்கள் அழிந்துபோகாமல் தொடர்ந்தும் பரப்பப்படுவதற்குமாக பல நிறுவனங்கள் ஷீஆக்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

அஹ்லுஸ்ஸுன்னாக்களுக்கு மிகவும் அநியாயம் செய்தவராகவும் ஷீஆக்களின் மீட்பாளராகவும் கருதப்பட்ட குமைனி 1989 ஜுன் மாதம் 2நாள் வைத்தியசாலையில் மரணித்தார். தஹ்ரானில் உள்ள ஜன்னதுஸ்ஸஹ்ரா எனும் மையவாடிக்கு அண்மையில் அடக்கம் செய்யப்பட்டார். அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அவருடைய கப்ரு கட்டப்பட்டு இன்றளவும் மற்றவர்களால் தரிசிக்கப்படும் இடமாகவும் ஷிர்க்கான, இஸ்லாத்தின் இறை கோட்பாடுகளுக்கு முரணான பல விடயங்கள் நடைபெறும் ஷீஆக்களின் வழிபாட்டுத்தலமாகவும் காணப்படுகிறது.

எல்லை மீறிய ஷீஆக்கள்

பொதுவாக மனிதர்களால் உருவாக்கப்பட்ட சிந்தனைகளிலும் கொள்கைகளிலும் தனிமனித வழிபாடு, தனிமனிதனை கடவுளின் ஸ்தானத்தில் வைத்து நோக்குவது, அவன் மரணித்ததும் அவனிடம் உதவி தேடுவது, மித மிஞ்சிய அடிப்படையில் அவனைப் புகழ்வது என்பன இடம் பெறுவது வழமை.

இறைவனது வழிகாட்டலில் முழுமையான இஸ்லாமிய நெறிகளைக் கொண்டு தன் சமூகத்தை வளர்த்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூட தான் மரணித்ததற்குப் பிறகு தன் கப்று இறைவனுக்குப் பதிலாக வணங்கப்படும் ஓர் இடமாக மாறிவிடுமோ என்று பயந்தார்கள். இதனால் தன் இறுதித் தருவாயில் கூட இறைவனிடம் "தன் கப்றை வணங்கப்படும் இடமாக மாற்றிவிடாதே" என்று பிரார்த்தனை செய்தார்கள்.

எனவே, தனிமனித வழிபாட்டையே முழுமையாகப் போசித்து வளர்த்த குமைனி போன்றவர்களில் மக்கள் எல்லை மீறுவதும் அவரிடம் உதவி தேடுவதும் ஆச்சரியமான ஒன்றல்ல. ஈரானின் பொது இடங்களில் குமைனியின் சிலைகளும் உருவப்படங்களும் காணப்படும் அதே நேரம் வீடுகளிலும் பள்ளிகளிலும் நிறைந்துள்ளன.

"குமைனியே உன்னிடம் நாங்கள் வந்துவிட்டோம்" எனும் வாசகங்கள் பொறிக்கப்பட்ட கைக்கடிகாரங்கள் ஷீஆக்களால் அதிகம் விரும்பப்படுவதுடன் அதை அணிவதில் ஆத்ம திருப்தி காண்கிறார்கள். குமைனியின் படங்களை தங்கள் உடம்பில் பச்சை குத்திக்கொள்கிறார்கள். நிச்சயமாக இவை இஸ்லாத்திற்கு முரணானவை என்பதை நாம் அறிவோம்.

குமைனியின் கப்றடியில் ஷீஆப் பொது மக்களையும் தாண்டி ஷீஆக்களின் அறிஞர்களும் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். விசேட தினங்களிலும் அவர் பிறந்த, மரணித்த தினங்களிலும்

இது போன்றவை அதிகமாக நடை பெறுகின்றன.

குமைனி மீது எல்லை தாண்டிவிட்ட ஷீஆக்கள் ஈரானுக்கு வரும், அழைத்துச் செல்லப்படும் சுற்றுலாப் பயனிகளுக்கு ஞாபகார்த்தமாக குமைனியின் உருவப்படங்களை வழங்குகிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அல்லாஹ் எம்மனைவரையும் இஸ்லாத்தை பின்பற்றச் செய்வானாக, ஆமீன்.

குமைனி பற்றி இஸ்லாமிய அறிஞர்கள்

குமைனி பற்றி ஷீஆ அறிஞர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை உங்களுக்கு நான் சொல்லத்தேவையில்லை. இந்த நூற்றாண்டில், சிலரிடம் இந்த உலகத்தில் குமைனி போன்ற ஒரு மனிதர் பிறக்கவில்லை என்பது சுருக்கமான ஷீஆ அறிஞர்களின் கருத்து என்று சொல்லலாம்.

குமைனிக்கும் இஸ்லாத்திற்கும் தொடர்பில்லை என்பது குமைனியின் கருத்துக்களை வாசிக்கும் சிறிய அறிவுள்ள ஒரு இஸ்லாமியனுக்கும் இலகுவில் விளங்கும் விடயம். அதனால் இங்கு அதிகமாக இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்களை தொகுப்பது நோக்கமல்ல. உதாரணத்திற்கு ஒரு சில அறிஞர்களின் கருத்துக்களை மாத்திரம் குறிப்பிடுகின்றேன்.

ஹிஜ்ரி 1400.08.15ல் நடைபெற்ற ஷீஆக்களின் மஹ்தி ஞாபகார்த்த விழாவில் குமைனி பேசிய பேச்சுக்கள் உலகில் வாழும் பல அறிஞர்களையும் குமைனிக்கு எதிராக திருப்பியது. “நபிமார்கள், ரஸூல்மார்களை விடவும் மஹ்தியை சிறப்பித்து பேசிய குமைனி. நபிமார்கள், ரஸூல்மார்கள் இந்த உலகில் நிறைவேற்றாத இலக்குகளை நிறைவேற்றவே அல்லாஹ் அவரை படைத்திருக்கின்றான்” என்று இஸ்லாத்தின் அடிப்படை விதிகளை மீறக்கூடிய வகையில் பேசியிருந்தார்.

குறிப்பாக இந்த பேச்சின் பிறகு குமைனியின் அந்தரங்கம் வெளிப்பட்டதோடு குமைனி பற்றி பேசாத பலரும் அவர் இஸ்லாத்தில் இல்லை என்றும் இறைவனுக்கு இணைவைத்துவிட்டார் என்றும் பேச ஆரம்பித்தனர்.

ராபிததுல் ஆலமுல் இஸ்லாமி.

இந்நிறுவனம் வெளியிட்ட அறிக்கை அஹ்பாருல் ஆலமில்

இஸ்லாமி என்ற பத்திரிகையில் ஹி.1400 ரமழான் 09ல் பிரசுரிக்கப்பட்டது. அதன் சுருக்கம் பின்வருமாறு.

“தஹ்ரான் வானொலியில் ஒலிபரப்பான சென்ற ஷ.்.பான் 15ல் நடைபெற்ற குமைனியின் பேச்சில் வந்த வார்த்தைகள் வெளிப் படையாகவும், நேரடியாகவும் இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு முரண்படுவதாகவும், அதன் அடிப்படைகளுக்கு முரண்படுவதாகவும் உள்ளது. மேலும் இஸ்லாத்திற்கும் அல் குர்ஆன், அல்ஹதீஸில் வந்தவற்றிற்கும் முஸ்லிம் சமுதாயமும் அதனது அறிஞர்களும் ஏகோபித்துள்ள விடயங்களுக்கும் தெளிவாக முரண்படும் வார்த்தைகளை உள்ளடக்கியுள்ளது.”

ராபிதாவின் அறிக்கையின் பிரகாரம்; இவ்வாறு இஸ்லாத்தின் அடிப்படைகளுக்கு முரண்படுகின்ற குர்ஆன் ஸுன்னாவுக்கு முரண்படுகின்ற வார்த்தைகளை உள்ளடக்கிய குமைனியின் பேச்சை மறுக்கும் அறிவித்தல்களோ, அல்லது அப்படி அவர் பேசவில்லை என்ற அறிக்கைகளோ தஹ்ரானிலிருந்து வரவில்லை என்று குறிப்பிட்டு அனைவருக்கும் அல்லாஹ் நேரான வழியைக் காட்டவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் அந்த அறிக்கை முடிந்துள்ளது.

இதுபோலவே, தூனிஸிய அறிஞர்கள், மொரோக்கோ அறிஞர்கள், ஈராக்கின் உலமாக்கள் ஒன்றியம் என்று இஸ்லாமிய அறிஞர்களின் பல அமைப்புக்கள் இதற்கு எதிராக கருத்துக்களை முன்வைத்ததுடன் பல இஸ்லாமிய அறிஞர்களும் இதற்கு எதிராக பேசியிருந்தனர்.

எது, எப்படியோ இன்ஷா அல்லாஹ் இந்த நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் இஸ்லாத்திற்கும், அதன் போதனைகளுக்கும் குமைனிக்கும் உள்ள உறவை தெளிவாக விளங்கிக் கொள்வார். பின்பு குமைனியைப் பற்றி ஒவ்வொருவரும் அவரது உள்ளத்தைக் கேட்டால் அதற்கு அவரது உள்ளம் பதில் சொல்லும்.

அல்லாஹ் எம்மனைவரையும் பாதுகாத்து அவனது நேரான வழியைப் பின்பற்றும் கூட்டத்தில் சேர்த்தருள்வானாக, ஆமீன்.

அல்லாஹ் பற்றிய நம்பிக்கை

ஷீஆக்கள் முஸ்லிம்களுடன் முரண்படும் முதலாவது இடம் அல்லாஹ் பற்றிய நம்பிக்கைதான். அந்த வகையில் குமைனியின் நம்பிக்கையும் ஏனைய ஷீஆக்களைப் போன்றதுதான் என்பதை தனது கருத்தின் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

“புத்தியை அடிப்படையாகக் கொண்டு தனது பணிகளை ஆற்றக்கூடிய ஒரு கடவுளையே நாங்கள் வணங்குகிறோம். அந்த இறைவன் புத்திக்கு முரண்படக்கூடிய எந்த வேலையையும் செய்யமாட்டான். கட்டுப்படுதல் வணக்கம், மார்க்கம் என்று பெரும் கோட்டையைக் கட்டிவிட்டு பின்பு அதை தன் கரத்தாலேயே உடைக்கின்ற கடவுளை நாம் வணங்க வில்லை. யஸீத், முஆவியா, உத்மான் போன்ற முஹாஜிர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்குகின்ற, அநியாயத்திற்கும் தீமைக்கும் உதவாமல் இருக்கும் வகையில் நபிக்குப் பிறகு இதுவரை மனிதனிடம் எதிர்பார்க்கப்படுவதை வரையறை செய்யாத கடவுளை நாம் வணங்கவில்லை.” (கஸ்புல் அஸ்ரார்)

குமைனி தன்னுடைய இந்தக் கருத்தில் அல்லாஹ்வைப் பற்றிய பல குற்றச்சாட்டுக்களையும், விமர்சனங்களையும் முன்வைக்கின்றார். (அல்லாஹ் எமது ஈமானைப் பாதுகாப்பானாக)

அல்லாஹ் புத்தியில்லாதவன்.

குமைனி தனது கருத்தில்: உஸ்மான் (ரழி), முஆவியா (ரழி), யஸீத் போன்றவர்களுக்கு ஆட்சியைக் கொடுப்பது புத்தியற்றவனின் செயல் என்று குறிப்பிடுகின்றார். ஆனால் வரலாற்றில் அவ்வாறுதான் நடந்துள்ளது. எனவே, இதைக் கொடுத்த அல்லாஹ் புத்தியற்றவன் என்பது குமைனியின் வாதம் அது மாத்திரமல்லாமல் புத்திக்கு முரண்படும் இத்தகைய அல்லாஹ்வை நாம் வணங்கவில்லை என்றும் அவர் குறிப்பிடுகிறார். ஏற்கனவே நபியின் காலத்தில் செய்த நல்ல

விடயங்களை பிற்பட்ட காலத்தில் அல்லாஹ்வே இல்லாமலாக்கிவிட்ட -தாகவும் அவர் குறிப்பிடுகிறார். (அல்லாஹ் எம் அனைவரையும் பாதுகாப்பானாக.)

அநியாயத்திற்கும் தீமைக்கும் உதவுபவன்.

குமைனி தன் கருத்தில் இந்த உலகத்தில் நடந்த அநியாயங்களை நிறுத்தும் வகையில் தகுதியானவர்களுக்கு அல்லாஹ் ஆட்சியைக் கொடுக்கவில்லை என்று குறிப்பிடுகிறார். எனவே, அல்லாஹ் அநீதிக்கும் தீமைக்கும் உதவுபவன் என்பது அவரது கருத்து.

அல்லாஹ் மார்க்கத்தை பூர்த்தி செய்யவில்லை.

அல்லாஹ் மனிதனிடமிருந்து எதிர்பார்ப்பதை இதுவரை வரையறை செய்யவில்லை என்று குறிப்பிடுகிறார் குமைனி. அல்லது குமைனி எதிர்பார்ப்பதை அல்லாஹ் சொல்லவில்லை என்று கூட அவருடைய வார்த்தைக்கு அர்த்தம் சொல்லலாம். இது முதல் நிலையை விடவும் படுமோசமான விளைவுகளைக் கொண்டுவரும்.

அல்லாஹ் தன் மார்க்கத்தைப் பூரணமாக்கிவிட்டதாகவும் தன் எதிர்பார்ப்புக்களை விளக்கிவிட்டதாகவும் அல்குர்ஆனில் சொல்கிறான். குமைனியின் இந்தக் கருத்து எல்லாவற்றையும் பொய்ப்பிப்பதாக அமைந்திருப்பதோடு, இறைவனின் நாட்டத்தைப் பொருந்திக் கொள்ளாமல் இறைவனுக்கே புத்தி சொல்கின்ற ஒருவராக அவரை மாற்றியுள்ளது.

(அல்லாஹ் எம் அனைவரின் ஈமானையும் பாதுகாப்பானாக.)

நபி (ஸல்) அவர்கள் பற்றிய நம்பிக்கை

யூத சக்திகளான ஷீஆக்கள் முஸ்லிம்களுடன் முரண்படும் அடுத்த நம்பிக்கை நபி (ஸல்) அவர்கள் பற்றிய நம்பிக்கையாகும். எம் உயிரிலும் மேலாக நாம் மதிக்கின்ற நபியவர்கள் பற்றி ஷீஆக்கள் தங்கள் நூல்களில் தரக்குறைவாக எழுதியிருக்கிறார்கள் என்பதை படித்தவர்கள் புரிந்துகொள்வார்கள். ஏனைய தன் சகோதரர்களைப் போல் குமைனியும் நபியவர்கள் பற்றி தரக்குறைவாக எழுதிக் குவித்திருக்கிறார். அவ்வாறு அவர் எழுதியதில் சிலவற்றை இங்கு நாம் அவதானிப்போம். (அல்லாஹ் எம் அனைவரினதும் ஈமானைப் பாதுகாப்பானாக)

பிரச்சாரப் பணியில் அல்லாஹ் நபியவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை (அல்லாஹ் அவருக்கு தவ்பீக் செய்யவில்லை).

“இமாம் (மஹ்தி) மறைந்திருக்கும் விடயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அது பல விடயங்களை எங்களுக்குத் தெளிவுபடுத்துகிறது. உலகம் முழுக்க நீதியை அதற்கே உரிய வடிவத்தில் நிலை நாட்டுவதற்கான மிகப் பெரும் ஒரு வேலையை அவர் செய்ய இருக்கிறார் என்பது அதில் ஒன்று. நாம் (ஷீஆக்கள்) எதிர்பார்த்திருக்கும் அந்த மஹ்தியைத் தவிர வேறு எவராலும் இந்த உலகில் இருக்கும் அனைத்து மக்களுக்கும் நீதியை நிலை நாட்ட முடியாது. மனிதர்களுக்காகவே அல்லாஹ் அவரை தயாரித்து வைத்துள்ளான். ஒவ்வொரு நபியும் நீதியை நிலைநாட்டுவதற்காகவே வந்தார்கள். உலகில் நீதியை நிலைநாட்டுவதுதான் அவர்களுடைய இலக்காக இருந்தது என்றாலும் அதில் அவர்கள் வெற்றி பெறவில்லை. இறுதி நபி (ஸல்) அவர்கள் கூட மனிதர்களை சீர்செய்து, நெறிப்படுத்தி நீதியை நிலைநாட்டுவதற்காகவே வந்தார்கள். என்றாலும் அவர்கூட அந்தப்பணியில் பொருந்திக்கொள்ளப்படவில்லை(அந்தப் பொறுப்பை அவராலும் நிறைவேற்ற முடியவில்லை.) உலகின் எல்லாப் பகுதிகளிலும் நீதியை நிலைநாட்டும் இந்தப் பொறுப்பில்

வெற்றியடைவது மஹ்தி மாத்திரம் தான்." (முஹ்தாராதுன் மின் அஹாதீத் வ ஹிதாபாத்தில் இமாம் அல் குமைனி)

ஷீஆக்களின் பன்னிரெண்டாவது இமாம் மஹ்தி என்பவர் ஒரு கற்பனைப் பாத்திரம். அவர் பிறந்தாரா? அவரின் உண்மைத் தன்மை என்ன? அவர் எங்கு இருக்கிறார்? என்பதிலும் மஹ்தி தொடர்பான மொத்த விடயங்களிலும் ஷீஆ அறிஞர்களிடம் கருத்து முரண்பாடு காணப்படுகிறது, இதனால் அவர்களிடம் பிரிவினைகளும் உள்ளது. இல்லாத ஒருவரை வலிந்து உருவாக்கப்போனதால் அவர்களுக்கு வந்த வினை இது. ஷீஆக்களின் மஹ்தி தற்போதும் உயிர்வாழ்வதாகவும் அவருக்கு தற்போது வயது 1119என்றும் "உண்மை உண்மையாக" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். ஷீஆக்களின் எதிர்பார்க்கப்படும் மஹ்தி தொடர்பான மேலதிக விடயங்களை "யார் இந்த ஷீஆக்கள்?" என்ற எனது நூலில் அறிந்துகொள்ளலாம்.

ஷீஆக்களால் உருவாக்கப்பட்ட இந்த மஹ்தி வாதத்தை மக்கள் மத்தியில் பரப்பவந்த குமைனி தனது இந்தக் கூற்றில் நபி (ஸல்) அவர்களை மாத்திரம் குறைகூறவில்லை. உலகில் வந்த அனைத்து நபிமார்களையும் குறைகூறியது மாத்திரமல்லாமல் அல்லாஹ்வையும் குறைகூறியிருப்பதைக் காண்கிறோம். அல்லாஹ் இந்த உலகில் ஒரு தூதுவரை அனுப்பும்போது அவரை சிறு பராயத்திலிருந்தே பாதுகாக்கிறான் என்பதை மூஸா (அலை) அவர்களின் வரலாற்றை படிக்கும் எவரும் புரிந்துகொள்வர். எனவே, இளம் பராயத்திலிருந்தே அல்லாஹ்வின் தூதுச்செய்தியை எத்திவைக்கவும், அவனின் இலக்குகளை மக்களுக்கு தெளிவுபடுத்தவும் அல்லாஹ்வால் தேர்வு செய்யப்பட்ட ஒரு தூதரான முஹம்மது (ஸல்) அவர்களை அல்லாஹ் இந்த இலட்சியத்திற்காக பொருந்திக்கொள்ளவில்லை என்பது அல்லாஹ்வை இழிவுபடுத்துவதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

இந்த உலகத்தில் மிகச் சிறந்த மனிதர்களான நபிமார்கள், ரஸூல்மார்கள் அனைவரையும் இந்தப் பணியில் அல்லாஹ்

பொருந்திக்கொள்ளவில்லை என்பது நிச்சயமாக இஸ்லாத்திற்கும் அதன் போதனைகளுக்கும், அதை ஏற்றுக்கொண்டவர்களுக்கும் எதிராக தொடுக்கப்படும் ஒரு போராகவே கருதவேண்டியுள்ளது. (இந்த ஷைத்தானியக் கொள்கையிலிருந்து அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக)

அல்லாஹ்வின் கட்டளையை எத்திவைத்தால் அல்குர்ஆன் மாற்றப்பட்டுவிடும் என்று பயந்தார்கள்.

"இந்த ஆதாரங்கள், செய்திகளிலிருந்து (பின்வரும் விடயம்) தெளிவாகிறது: (அலியுடைய) தலைமைத்துவத்தின் பால் மக்களை அழைப்பதற்கு நபியவர்கள் பயந்தார்கள். இஸ்லாமிய வரலாற்றையும செய்திகளையும் வாசிப்பவர்கள் நபியவர்கள் இவ்வாறு பயந்தது யதார்த்தமானதுதான் என்பதை அறிந்துகொள்வர். என்றாலும் அல்லாஹ் எத்திவைக்குமாறு ஏவியதோடு அவரை பாதுகாப்பதாகவும வாக்களித்தான்." (கஷ்புல் அஸ்ரார்)

"தனக்குப்பிறகு அல்குர்ஆன் மாற்றப்பட்டுவிடும் என்று பயந்ததன் காரணமாக அல்குர்ஆனில் உள்ள தலைமைத்துவத்தின் பால் அழைப்பு விடுப்பதை நபியவர்கள் தவிர்ந்திருந்தார்கள் என்பதை இப்பேச்சின் ஆரம்பத்திலேயே நாம் உறுதிப்படுத்தி விட்டோம்." (கஷ்புல் அஸ்ரார்)

உலகம் அழியும் வரை நிலைத்திருக்கும், இறுதித் தூதான இந்த செய்தியை எத்திவைப்பதற்கு பொருத்தமான ஒருவரையே அல்லாஹ் தேர்வு செய்தான். தனது பாதுகாப்புக்கே உத்தரவாதமில்லாத மக்காவில், தனிமையில் நின்று அத்தனை எதிர்ப்புக்களையும் சமாளிப்பதற்கு துணிவில்லாத, வீரமற்ற ஒருவரைத் தேர்வு செய்வது பொருத்தமற்றது. அல்லாஹ் மக்காவாசிகளின் நிலை தெரிந்தவன் என்பதனால் தைரியமுள்ள ஒருவரைத்தான் இந்தப் பிரச்சாரப் பணிக்கு தேர்வு செய்தான். ஆனால் இங்கே குமைனி அல்லாஹ்வின் தேர்வையே பிழைகாண்கிறார். சகோதரர்களே இதற்குப்பிறகு இஸ்லாத்தில் குற்றம் பிடிப்பதற்கு மீதி ஏதும் இருக்கிறதா?.

முஸ்லிம் அல்லாதவர்களே நபியவர்களின் வீரத்தைப்போற்றும் இந்தக் காலத்தில் முஸ்லிம்களின் ஆன்மீகத்தலைவர் என்று ஷீஆக்களால் போற்றப்படும் இத்தகையவர்களிடமிருந்து இவ்வாறான கருத்துக்கள் வெளிப்படுவது இஸ்லாத்திற்கும் இவர்களுக்கும் இடையில் உள்ள தொடர்பை வெளிக்காட்டுகிறது...

நபியவர்கள் என்ன சொன்னாலும் மாற்றுக்கருத்துச் சொல்லாமல் ஏற்றுக்கொள்ள ஒரு கூட்டம் இருந்தது. ஆனால் நபியவர்கள் சொல்லவில்லை, சொல்வதற்குப் பயந்தார்கள் என்ற வாதம் நபியவர்ளை கோழையாக மாத்திரம் சித்தரிக்கவில்லை. களத்தைப் பற்றித் தெரியாத அறிவிலியாகவும் சித்தரிக்கிறது.

ஒரு வாதத்திற்கு நபியவர்கள் அப்படியானவர்களை தன் பக்கத்தில் வைத்துக்கொண்டார்கள் என்று சொன்னாலும் அதுவும் நபியவர்களை அவமதிப்பதாகவே அமைந்துவிடும். ஏனெனில் தன்னை உயிரிலும் மேலாக மதிக்கக்கூடியவர்கள் இருந்தபோதிலும் அவர்களுக்கு சமூகத்தில் முதலிடத்தை உருவாக்க முயற்சிக்காமல் தன்னை எதிர்க்கின்ற, தான் அஞ்சுகின்றவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது நபியின் அறிவீனத்தை சித்தரிப்பதாக அமையும்.

இது இறைவனையும் குறை கூறுகின்ற ஒரு கருத்து. தூதுச் செய்தியைக் கொடுத்த அல்லாஹ் அதை முழுமையாக எத்திவைப் பதற்கான சந்தர்ப்பங்களை கொடுக்கவில்லை என்றாகிவிடும். அந்தச் செய்தியைப் பாதுகாப்பதற்கான மனிதர்களையும் உருவாக்கவில்லை என்றாகிவிடும். மேலும், நபியவர்களுக்கு இருந்த அபாயங்களை வெற்றி கொள்வதற்கான வழிகளை அல்லாஹ் ஏற்படுத்தவில்லை என்பது போலாகும். தானே அவரை பாதுகாப்பதாகச் சொன்ன அல்லாஹ் அவரை அழிக்கின்ற ஒரு கூட்டத்தையும் அவருடன் கூடவே வைத்திருந்தான் என்பது அல்லாஹ்வைக் குறை காணும் கூற்றல்லாமல் வேறு எதுவாகவும் இருக்காது.

தூதுச் செய்தியை எத்திவைப்பதில் நபியவர்கள் தோற்றுவிட்டார்கள்.

“தலைமைத்துவம் தொடர்பான செய்திகளை அல்லாஹ் ஏவிய அடிப்படையில் எத்திவைத்திருந்தால் அதை நிறைவேற்றத் தேவையான அளவு முயற்சி செய்திருந்தால் இஸ்லாமிய நாடுகளில் இன்று இருக்கின்ற கருத்து முரண்பாடுகள், குரோதங்கள், போராட்டங்கள் எதுவும் இருந்திருக்காது. மேலும் மார்க்கத்தின் அடிப்படைகளிலும் கிளை அம்சங்களிலும் எந்த முரண்பாடுகளும் தோன்றியிருக்காது என்பது தெளிவு.” (கஷ்புல் அஸ்ரார்)

“உலகத்தில் நீதியின் அடிப்படைகளை நிலைநாட்டவே நபிமார்கள் அனைவரும் வந்தார்கள் என்றாலும் அவர்கள் இதில் வெற்றியடைய வில்லை. மனிதர்களை சீர்படுத்தி, நீதியை நடைமுறைப்படுத்துவதற்கு வந்த இறுதி நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கூட அதில் வெற்றிபெறவில்லை.” (ஹி1400ல் மஹ்தியின் பிறந்த தினத்தையிட்டு செய்த சொற்பொழிவில் நஹ்ஜு குமைனி என்ற நூலிலிருந்து)

நபியவர்கள் தன் தூது செய்தியை எத்திவைப்பதில் வெற்றி கண்டார்களா? இல்லையா? என்பதை இன்றைக்கு நாம் சொல்ல வேண்டிய தேவையில்லை. முழு உலகமும் சொல்கிறது. இந்த உலகில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய மனிதர்களில் நபியவர்களுக்கே முதலிடம் வழங்கப்படுகிறது. காரணம் அவர் தூதுச் செய்தியை எத்திவைப்பதில் வெற்றி கண்டார்.

இந்த உலகில் இறைவனின் தூதுச் செய்தியை எத்திவைத்தவர்களில் மிகச் சிறந்தவரான முஹம்மது நபி(ஸல்) அவர்கள் வெற்றிபெறவில்லை என்று சொன்னால் எவரால் வெற்றி பெற முடியும்…?

குமைனி மற்றும் ஷீஆக்களின் கொள்கை எந்தளவுக்கு இஸ்லாத்திற்கு எதிரானது என்பதை இக்கருத்துக்கள் எங்களுக்கு உணர்த்துகின்றன.

மறுமையில் அதிகமாக சுவனம் நுழைபவர்கள் நபியவர்களின் உம்மத்தினர்தான், நபியவர்கள்தான் முதலில் எழுப்பப்படுவார்கள்,

அவர்தான் கேள்வி கணக்கிற்காக சிபாரிசு செய்வார், அவர்தான் முதலில் சுவனம் நுழைவார், அவருடைய சமூகமே முதலில் சுவனம் நுழையும்... இத்தகைய சிறப்புக்கள் எல்லாம் நபியவர்கள் தூதுச் செய்தியை எத்திவைப்பதில் தோற்றதனால் வழங்கப்பட்டதா?

வெற்றி தோல்வி அல்லாஹ் கொடுப்பது என்பது எங்களுக்குத் தெரியும். அப்படியென்றால் உலகம் அழியும் வரை நிலைத்திருக்கும் வகையில் வழிகாட்டல்களை வழங்குவதற்காக அல்லாஹ் தன் இறுதித் தூதரை அனுப்பி அவருக்கு வெற்றி கொடுக்கவில்லை என்றாகிவிடும். குமைனியின் கருத்து இதையே உணர்த்துகின்றது. இதன் மறு அர்த்தம் அல்லாஹ் அறிவற்றவனென்பதாகும். அத்தோடு தன் இறுதித்தூதை வழங்குவதற்கு தகுதியில்லாத ஒருவரை அல்லாஹ் தேர்வு செய்தான் என்று சொல்வதாகவும் ஆகிவிடும். (அல்லாஹ் இந்த வழி கெட்ட சிந்தனைகளிலிருந்து எம்மனைவரைய்யும பாதுகாப்பானாக.)

அத்தோடு குமைனியின் இந்தக் கூற்று நபியவர்கள் எத்திவைக்கத் தேவையான விடயங்களை எத்திவைத்து அதற்காக முயற்சிப்பதை விட்டுவிட்டு வேறு விடயங்களில் முயற்சித்திருப்பதாகச் சொல்கிறது. இங்கே, உண்மையான நபி குமைனியா? அல்லது முஹம்மத் (ஸல்) அவர்களா? என்ற கேள்வி எழும்புகிறது. ஏனெனில் குமைனியின் இந்தக் கூற்று நபியவர்களை சாதாரணமான ஒரு மனிதனாகவும் குமைனியை நபியை விடவும் மேதாவியாகவும் சித்தரிக்கிறது. அதனால் நபியை அவர் பிழை காண்கிறார். நபியவர்கள் எத்திவைத்த செய்திகளை அதற்கே உரியமுறையில் எடுப்பதுதான் இறை நேசர்களின் செயல் ஆனால், குமைனி....?

உலகத்தாருக்கே அருட்கொடையாக, அமைதியின் இருப்பிடமாக, சமாதானத்தின் தூதுவராக அனுப்பிவைக்கப்பட்ட நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இந்த உலகில் பிரச்சினைகளைத் தோற்றுவித்தார் என்றும் இன்றளவும் நடக்கின்ற பிரச்சினைகளுக்கு அவர்தான் பொறுப்பு என்றும் குமைனி மேலே உள்ள தனது கூற்றில்

சொல்கிறார். இதற்கும் டென்மார்க்கில் நபியவர்களுக்கு எதிராக வரையப்பட்ட கேலிச்சித்திரத்திற்கும இடையில் என்ன வித்தியாசம். அமெரிக்காவும் இஸ்ரேலும் முஸ்லிம்களின் எதிரிகள் அவர்களை நாம் எதிர்க்க வேண்டும் அவர்கள் நமது நபியைக் கொச்சைப் படுத்துகிறார்கள். சல்மான் ருஸ்திக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்றெல்லாம் கூக்குரலிடும் ஷீஆக்கள் குமைனியின் இந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டிருப்பதும் அவரை ஆன்மீகத் தலைவராகப் போற்றுவதும் விந்தையிலும் விந்தையாகும். அதாவது, நாம் நபியைப் பற்றி எதுவேண்டுமானாலும் சொல்வோம் ஆனால், காபிர்களாகிய நீங்கள் எதுவும் சொல்லிவிடக்கூடாது என்று சொல்வதைப் போல் உள்ளது ஷீஆக்களின் நிலை.

உண்மையில் குமைனியின் இத்தகைய சிந்தனைகள் இருபத்தியோராம் நூற்றாண்டில் இஸ்லாத்திற்கெதிராகப் போர் தொடுத்து வெற்றி கண்ட ஒரு மிகப்பெரும் மனிதராகவே அவரை சித்தரிக்கின்றன.

நபியவர்களால், தான் விரும்பிய அரசாங்கத்தை உருவாக்க முடியவில்லை:

“இரண்டு விடயங்களுக்காக நான் கைசேதப்படுகிறேன். அதில் ஒன்று மற்றயதை விடவும் எனக்கு அதிக கவலையை உருவாக்குகிறது. (அது) இஸ்லாம், நபித்துவம் தோன்றிய காலம் தொடக்கம் மற்றும் அதை அடுத்து வந்த காலங்களிலும் அது விரும்புவதைப்போன்ற ஒரு ஆட்சியை உருவாக்குவதற்கு எவரும் அழைக்கவில்லை. நபி (ஸல்) அவர்களது காலத்திலும் அதிகமான போராட்டங்கள், பிரச்சினைகள் நிறைந்திருந்ததனால் அவர் விரும்பிய அடிப்படையில் ஓர் அரசை அவரால் நிறுவ முடியவில்லை.” (முஹ்தாராதுன் மின் அஹாதீஸ் வ ஹிதாபாதில் இமாம் குமைனி)

மேலே உள்ள கூற்றுக்களில் நபியவர்களை கடுமையாக விமர்சித்த குமைனி இந்தக் கூற்றிலும் நபியவர்களையும் அவருக்கு அந்த சந்தர்ப்பத்தை வழங்காத அல்லாஹ்வையும் விமர்சிப்பதைக் காண முடிகிறது.

குமைனியின் இந்தக் கருத்து நபியவர்களிடம் அரசியல் ரீதியான, ஆட்சியியல் தொடர்பான முன்மாதிரிகள் இல்லை என்பதைச் சொல்வதாக உள்ளது. குமைனி தன் புரட்சியில் வெற்றி அடைந்தாராம ஆனால் நபியவர்கள் சரியான அரசை உருவாக்குவதில் தோற்றுவிட்டாராம். ஸுப்ஹானல்லாஹ்.

எல்லாத்துறைகளுக்கும் வழிகாட்டிய ஒரே மனிதர் முஹம்மத் (ஸல்) அவர்கள்தான் என்று போற்றப்படும் இந்தக் காலத்திலும் இப்படி யோசிப்பவர்கள் இருப்பது ஆச்சரியமானதுதான். அதிலும் முஸ்லிம்களின் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இப்படி சிந்திப்பது மிகவும் ஆச்சரியமானது.

சிறந்ததோர் ஆட்சியை நிறுவி, ஆட்சியியல் அறநெறிகளைக் கற்பித்த ஒரு நபியைப் பார்த்து இவ்வாறு விமர்சிப்பது இஸ்லாத்தை விட்டும் ஒருவரைத் தூரமாக்கிவிடும் என்பதில் எவருக்கும் ஐயமிருக்காது.

அல் - குர் ஆன்

“அல்லாஹ்வின் ஏக பிரதிநிதியாக இருக்கும் சங்கையான அலியிப்னு அபீ தாலிப் (அலை) அவர்களே இந்தக் குர்ஆனை சுமப்பதற்கு சக்தியுள்ளவர்.”

“இறைவனால் இறக்கிவைக்கப்பட்ட அனைத்து வேதங்களும் மாற்றப்பட்டுள்ளன. மேலும் அல்குர்ஆனும், அதன் சங்கையான அனைத்து வசனங்களும் மாற்றப்பட்டுள்ளன. பெயர்கள் என்ற உலகிலிருந்து நிதர்சன உலகு, இறுதி அதிகாரம் என்று விரிந்து செல்லும் படித்தரங்கள், நிலைகளுக்கு ஏற்ப பல மாற்றங்கள் இடம்பெற்றதன் பின்பே அது மனிதர்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது. மாற்றத்தின் படித்தரங்களின் எண்ணிக்கை ஒரு செருப்பு இன்னொரு செருப்புக்கு ஒத்திருப்பதைப் போல அல்குர்ஆன் வசனங்களின் உள்ளார்ந்த கருத்துக்களின் எண்ணிக்கையுடன் ஒத்துப்போகிறது.” (அல்குர்ஆன் பாபு ம.்.ரிபதில்லாஹ்)

“அவர்கள் (ஸஹாபாக்கள்) குர்ஆனை தங்களின் கெட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கான உபாயமாக பயன்படுத்தினார்கள். எனவே, இமாம் அலியின் பெயர் குர்ஆனில் கூறப்படுகின்றபோது அல்குர்ஆனை மாற்றியிருப்பார்கள் என்பது சாத்தியமானதுதான். மேலும் அந்த வசனங்களை குர்ஆனிலிருந்து நீக்கி, இந்தக் களங்கத்தை முஸ்லிம்களின் வாழ்வில் சேர்த்திருப்பார்கள் என்பதும் சாத்தியமானதுதான்.” (கஷ்புல் அஸ்ரார்)

முஸ்லிம்களிடம் இருக்கின்ற குர்ஆன் உண்மையானது அல்ல. உண்மையான குர்ஆன் மஹ்தியிடமே இருக்கிறது. அந்தக் குர்ஆனில் இப்போது இருக்கும் குர்ஆனில் உள்ள எதுவும் இல்லை. அது இதை விடவும் மும்மடங்கு பெரியது. மஹ்தி வரும்போது அதைக் கொண்டு வருவார். நபியவர்கள் மரணித்ததிலிருந்து இன்றுவரை முஸ்லிம்கள் உண்மையான குர்ஆன் இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள் என்பது ஷீஆக்களின் வாதம்.

அதே, வாதத்தையே குமைனியும் முன்வைக்கிறார் என்பதை அவரின் இக் கூற்றுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.
(அல்லாஹ் இத்தகைய நச்சுக் கருத்துக்களிலிருந்து நம் அனைவரையும் பாதுகாப்பானாக..)

இப்போது இருக்கும் குர்ஆன்தான் உண்மையானது என்பதை அல்லாஹ் பல வழிகளில் நிரூபிக்கிறான்.

“நாம் தான் இந்த உபதேசத்தை இறக்கினோம், அதை நாம் தான் பாதுகாப்போம்” (15:9) அல்குர்ஆன் பற்றி இறைவன் கொடுக்கும் உத்தரவாதம் இதுவாகும். அல்லாஹ் இந்தக் குர்ஆனை மக்களின் பாவனைக்காகவே பாதுகாக்கிறான். மக்களின் பாவனையில் இல்லாத கற்பனையான ஒன்றை அல்லாஹ் பாதுகாப்பதினால் எந்தப்பயனும் மக்களுக்கு இல்லை. எனவே, தற்போதுள்ள குர்ஆன் இறைவனின் பாதுகாப்பில் இருப்பதனால்தான் முஸ்லிம்களுக்கு எதிராக எவ்வளவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் மற்றவர்கள் முஸ்லிம்களாவதற்கு காரணமாக இருக்கும் குர்ஆனை எதுவும் செய்ய முடியாத நிலை உள்ளது.

“அல்குர்ஆன் அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் அதில் நிறைய முரண்பாடுகளைக் கண்டிருப்பீர்கள்” (04:82)

இந்தக் குர்ஆன் அல்லாஹ்வுடையதுதான். அதில் எவரும் விளையாட முடியாது என்பதற்கு அல்லாஹ் சொல்லும் இந்த சோதனையும் முக்கியமானது. அல்குர்ஆனில் முன் பின் முரண்பாடுகள் இருந்தால் அது மனித கையாடல்களுக்கு உள்ளாகியிருக்கிறது என்பது அதன் அர்த்தம். ஆனால் இன்று வரை எவரும் அவ்வாறு சொல்ல வில்லை எனும் போது அல்குர்ஆன் இறைவனின் பாதுகாப்பில் உள்ளது என்பதை உணர்த்துகிறது.

“உங்களால் முடியுமென்றால் அல்குர்ஆனில் உள்ள அத்தியாயம் போன்று ஒரு அத்தியாயத்தைக் கொண்டுவாருங்கள்” (02:23) என்று அல்லாஹ் சவால் விடுகிறான். அல்குர்ஆனில் மிகச் சிறிய

அத்தியாயம் மூன்று வசனங்களைக் கொண்டது அதைக் கூட இன்று வரை எவராலும் கொண்டுவர முடியாமல் இருப்பது இந்தக் குர்ஆனின் உண்மைத் தன்மைக்கு கட்டியம் கூறுவதாக உள்ளது.

முஸ்லிம்களின் எதிரிகளில் தவறு கண்டுபிடிப்பதற்காக குர்ஆனை ஆய்வு செய்தவர்கள் தோல்வியடைந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதுதான் வழமையாக இருந்திருக்கிறது. ஆனால், குமைனி போன்ற ஷீஆக்களின் ஆன்மீகத் தலைவர்களுடைய கருத்து இஸ்லாத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்கே பிறந்தவர்கள் பேசுவதைப் போன்று உள்ளது. (அல்லாஹ் போதுமானவன்.)

சகோதரர்களே! அல்குர்ஆனே இந்த உலகில் இல்லை என்ற வாதம் அல்குர்ஆனிலிருந்து முஸ்லிம்களைத் தூரப்படுத்த வேண்டும் எனும் முஸ்லிம்களது எதிரிகளின் செயற்பாடுகளில் ஒரு வடிவம்தான். முஸ்லிம்களுக்கு வெளியில் இருக்கும் ஒரு கூட்டம் இப்படி செய்யவேண்டும் என்று திட்டமிடுகிறது. அதை நிறைவேற்றும் பொறுப்பை முஸ்லிம்களுக்குள் இருப்பவர்களிடம் வழங்கிவிடுகிறது.

இந்த உலகத்தில் அல்-குர்ஆன் இல்லையென்றால் இஸ்லாம் என்றும் முஸ்லிம் என்றும் நாம் பேச முடியாது. இதையே இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் விரும்புகிறார்கள். இந்த உலகில் எல்லா சமுகங்களை விட்டும் பிரிந்து நிற்கின்ற தனித்துவமான அடையாளங்களைக் கொண்ட ஓர் இனமாக முஸ்லிம்கள் இருக்கக் கூடாது என்பதே இஸ்லாத்தின் எதிரிகளின் எதிர்பார்ப்பாகும்.

அல்லாஹ் இத்தகைய சக்திகளிலிருந்து எம்மனைவரையும் பாதுகாப்பானாக.

வஹி

“நிச்சயமாக பாதிமா (ரழி) அவர்கள் தன் தந்தை நபி (ஸல்) அவர்கள் மரணித்ததன் பிறகு எழுபத்தி ஐந்து நாட்கள் மிகவும் கவலையுடன் கழித்தார்கள். அவருக்கு ஆறுதல் சொல்வதற்காகவும், எதிர்காலத்தில் நடக்க இருக்கும் செய்திகளை அறிவிப்பதற்காகவும் அவரிடம் நம்பிக்கைக்குரிய ஜிப்ரீல் வரக் கூடியவராக இருந்தார். இது தொடர்பாக வந்திருக்கும் அறிவிப்புக்களை வைத்துப் பார்க்கும் போது இந்த எழுபத்தி ஐந்து நாட்களில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் பாதிமா (ரழி)) அவர்களிடம் அதிகமாக வந்து சென்றிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. பெரும் நபிமார்களைத் தவிர வேறு எவர் விடயத்திலும் இவ்வாறான அறிவிப்புக்கள் வந்திருப்பதாக நான் நம்பவில்லை. ஜிப்ரீல் (அலை) அவர்களினூடாக பாதிமா (ரழி) அவர்களுக்கு வரக்கூடிய செய்திகளை அலி(ரழி) அவர்கள் எழுதிக்கொண்டிருந்தார்கள். ஈரான் பற்றிய விடயங்களும் அவர்களிடம் வந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கிறது.”
(1986.3.2ல் ஈரானில் அனுஸ்டிக்கப்படும் ஈதுல் மர்ஆ பெருநாளை ஒட்டி அவர் பேசிய உரையிலிருந்து)

ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் வஹி இறக்கப்படுவது அல்லாஹ்வால அனுப்பப்பட்ட நபிமார்களுக்கும் ரஸூல்மார்களுக்கும் மாத்திரம்தான் என்பது எமது சிறார்கள் கூட அறிந்த விடயம். ஆனால், குமைனி பெண்களைப் புகழுகிறோம் என்ற பெயரில் ஈரானின் சிறப்பை சொல்வதற்கு எவ்வளவு பெரிய பொய்யை இட்டுக்கட்டுகிறார் பாருங்கள். ஈரானில் அவர் செய்த கொலைகள், அநியாயங்கள் பற்றி பாதிமா (ரழி) அவர்களுக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டதாம். ஸுப்ஹானல்லாஹ்.

அதுவும் இவ்வாறான வஹி பெரிய நபிமார்கள் ரஸூல்மார்களுக்கே வந்திருப்பதாக சொல்கிறார். அப்படியென்றால், பாதிமா (ரழி) அவர்கள் நபியென்றோ அல்லது ரஸூல் என்றோ குமைனி நம்புவதைப்போல் தோன்றுகின்றது. இவ்வாறு நம்பினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை. ஏனெனில் ஷீஆக்களிடம் பாதிமா (ரழி) எல்லோரை விடவும் மேலானவர்தான்.

ஸஹாபாக்கள்

நபி (ஸல்) அவர்களின் காலத்திலிருந்த ஸஹாபாக்களைவிட இக்காலத்தில் வாழும் ஈரானியர்களே மிகவும் சிறந்தவர்கள்.

“நான் துணிவோடும் உறுதியோடும் நம்பக்கூடிய ஒரு விடயம்: நிச்சயமாக பல மில்லியன் கணக்கான சமூகத்தைக் கொண்டுள்ள ஈரான் மக்கள் நபியவர்களின் காலத்தில் ஹிஜாஸில் (மக்கா, மதீனாவில்) வாழ்ந்த மக்களை விடவும் மிகவும் சிறந்தவர்கள், மேலும் அலி (அலை) அவருடைய மகன் ஹுஸைன் (அலை) அவர்களின் காலத்தில் ஈராக்கில் வாழ்ந்த கூபா வாசிகளையும் விட மிகவும் சிறந்தவர்கள்.... ஈராக், கூபா வாசிகள் அலி(அலை) அவர்களுடன் மோசமான தொடர்பாடல்களைக் கொண்டிருந்தனர் அவருக்கு மாறு செய்தனர். அவர்கள் தொடர்பாக இமாமுடைய முறைப்பாடுகள் அவர்கள் ஊடாக வந்தவற்றிலும் வரலாற்று நூல்களிலும் அறியப்பட்ட விடயமாகும், ஈரக், கூபாவில் வாழ்ந்த முஸ்லிம்கள் ஷுஹதாக்களின் தலைவர் இமாம் ஹுஸைனுக்கு செய்ய வேண்டியதையெல்லாம் செய்தார்கள். கொலைக் குற்றத்தை அவர்கள் சுமக்காவிட்டாலும் போராட்டத்திலிருந்து வெருண்டோடினார்கள். அல்லது அந்த வரலாற்றுக் குற்றம் நடைபெறும் வரை எதுவும் செய்யாமல் உட்கார்ந்திருந்தார்கள்.”

(அல் வஸிய்யதுஸ் ஸியாஸிய்யா அல் இலாஹிய்யா)

“எனது சமூகத்தில் மிகச் சிறந்தவர்கள் எனது இந்த நூற்றாண்டில் வாழ்பவர்கள்...” (புஹாரி, முஸ்லிம்) என்று நபியவர்கள் சொன்னார்கள். காரணம் அவர்கள் நபியவர்களைக் கண்டு அவரின் பராமரிப்பில் வளர்ந்தவர்கள். ஆனால், குமைனியைக் கண்டு அவரின் உபதேசங்களில் வாழ்ந்தவர்கள்தான் ஸஹாபாக்களை விடவும் சிறந்தவர்கள் என்பது குமைனியின் வாதம். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். இவ்வளவு விடயங்களையும் குமைனி சொன்னதற்குப் பிறகும் அவரை ஆன்மீகத்தலைவர் என்று சொல்ல ஒரு கூட்டம் இருக்கத்தானே செய்கிறது...?

இங்கு ஓர் இமாமின் கூற்று எனக்கு ஞாபகம் வருகிறது. “ஷீஆக்கள் பறவைகளாக இருந்திருந்திருந்தால் பிணம் தின்னும் கழுகுகளாகவும், கால் நடைகளாக இருந்திருந்தால் கழுதைகளாகவும் இருந்திருப்பார்கள்.” உண்மையில் ஷீஆக்கள் எல்லோரிடமும் அப்படியான உணர்வு இருப்பதனால்தான் இவ்வாறு கருத்துச் சொன்னவர்களை தங்களின் தலைவர்களாக ஏற்றுக்கொண்டது மாத்திரமல்லாமல் மற்ற எல்லோரையும் விட சிறப்புக்குரியவராகவும், உலகின் உத்தமராகவும் அவரைப் போற்றுகிறார்கள்.

நபியவர்களின் உயிருக்கே உத்தரவாதம் இல்லாத அந்தக் காலத்தில நபியவர்களை ஏற்றுக்கொண்டு அவரைப் பாதுகாப்பதிலும் முஸ்லிம்களைப் பாதுகாப்பதிலும் முழுமையாக தங்களை ஈடுபடுத்திக்கொண்ட ஸஹாபாக்கள் ஒரு கவளம் அளவு செய்த தர்மத்தின் நன்மையை நீங்கள் உஹது மலையளவு தர்மம் செய்தாலும பெற்றுக்கொள்ள முடியாது என்றார்கள் நபியவர்கள். இந்த சமூகத்தில எல்லா சிறப்புக்களிலும் நன்மையிலும் முந்திய அந்த உத்தம ஸஹாபாக்களைப் பற்றிய குமைனியின் பார்வை இதுதான். அல்லாஹ் எம் அனைவரையும் பாதுகாப்பானாக.

உலகத்திற்காகவும் தலைமைத்துவத்திற்காகவுமே நபியவர்களுடன இணைந்திருந்தார்கள்.

“அல்குர்ஆனுடன் உள்ள பற்றினாலோ, இஸ்லாத்துடன் உள்ள தொடர்பினாலோ அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக உலக இன்பங்களுக்காகவும், தலைமைத்துவத்திற்காகவும் நபியவர்களுடன் இருந்த இத்தகையவர்கள் அல்குர்ஆனை மாற்றியிருப்பது சாத்தியமானதுதான்.” (கஸ்புல் அஸ்ரார்)

உலக இன்பங்களுக்காக, தலைமைத்துவத்திற்காக நபியவர்களுடன ஸஹாபாக்கள் இணைந்திருந்தார்கள் என்று ஸஹாபாக்களைத் தூற்றும் மாமேதை குமைனியாகத்தான் இருக்க முடியும். நபியவர்களை ஏற்றுக்கொண்டால் உயிருக்கே உத்தரவாமில்லாத அந்தக் காலத்தில் நபியவர்களை ஏற்றுக்கொண்டு தங்களின்

அனைத்து இன்பங்களையும், வசதிகளையும் இழந்த மக்களைப் பார்த்து இவ்வாறு விமர்சிப்பது உண்மையில் இஸ்லாத்தை அழிக்கும முயற்சி என்றே பார்க்கப்பட வேண்டும்.

“ஷீஆக்கள் ஸஹாபாக்களைக் குறை காண்பதின் மூலம் ஸஹாபாக்களைக் குறை சொல்வது அவர்களின் நோக்கமல்ல மாறாக எமது முதலாவது சாட்சிகளான அவர்களை எம் உள்ளத்திலிருந்து நீக்கிவிடுவதன் மூலம் இஸ்லாத்தை நீக்கி விட நினைக்கிறார்கள்” என்று இமாம்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஸஹாபாக்களை ஒருவர் குறை கண்டுவிட்டால் அவர்களின் நோக்கத்தில் பிழை கண்டால் அதற்குப் பிறகு அவரால் முஸ்லிமாக இருக்க முடியாது. அல்குர்ஆனை ஏற்றுக்கொள்ளவோ ஹதீஸை ஏற்றுக்கொள்ளவோ முடியாது. இந்த நிலையை உருவாக்குவதே குமைனியின் இலட்சியம் என்பது இங்கு தெளிவாகத் தெரிகிறது. எனவே, ஸஹாபாக்களைக் குறைகாண இவர் முனையவில்லை. அவர்களின் மூலம் அறிவிக்கப்பட்ட செய்திகளையும் குர்ஆனையும் குறைகாணவே முயற்சிக்கிறார்.

ஸஹாபாக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதனால் தங்களின் புகழ், பட்டம், பதவி, சொத்து, குடும்பம், நாடு, உயிர் என்று அனைத்தையும் இழந்தார்கள். இத்தனையையும் இழக்க நேரிடும் ஒரு கொள்கையை உலக இன்பத்திற்காக ஏற்றுக்கொண்டார்கள் என்று சொல்வது அரைவேக்காட்டுத்தனமும் குரோத மனத்திற்கான எடுத்துக் காட்டுமாகும்.

உலகத்தில் ஒரு கொள்கை வேரூண்றுவதற்கு அதை ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்பவர்களின் இதய சுத்தியும் தியாகமும் மிகவும் முக்கியமானது. இஸ்லாம் இந்தளவு பரவியிருக்கிறது என்றால் ஸஹாபாக்கள்தான் அன்று அதற்கான விதைகளைத் தூவினார்கள்.

ஸஹாபாக்களின் தியாகங்களையும் அவர்களின் சிறப்புக்களையும் அறிந்தவர்களிடம் இவ்வாறான ஒரு சிந்தனை வருவதற்கு வாய்ப்பே

இல்லை. மேலும், ஸஹாபாக்கள் செய்த தியாகத்தின் காரணமாக அல்லாஹ் முஸ்லிம்களின் உள்ளங்களில் அவர்களைப் பற்றி ஒரு இனந்தெரியாத மதிப்பையும் மரியாதையையும் போட்டிருக்கிறான். ஸஹாபாக்களை ஒருவன் நேசிப்பது ஈமானுக்கான அடையாளம் என்பது இஸ்லாத்தின் போதனைகளிலிருந்து நாம் விளங்கக் கூடிய விடயம். அப்படியானவர்களில் குமைனி இல்லை என்பதையே அவரின் இத்தகைய கருத்துக்கள் எடுத்துக்காட்டுகிறது. அல்லாஹ் போதுமானவன்.

கலீபாக்கள்

அபூபக்ர், உமர் இருவரும் காபிர்கள், மடையர்கள், முனாபிக்குகள்.

“எமக்கு அபூபக்ர், உமரிடம் எந்தத் தேவையுமில்லை. மேலும் அவர்கள் குர்ஆனுக்கு முரண்படும் விதத்தில் செய்தவை, இறைவனுடைய சட்டங்களில் அவர்கள் காட்டிய விளையாட்டுக்கள், அவர்கள் இருவரும் ஹலாலாக்கியவை, ஹராமாக்கியவை, அவர்கள் செய்த அநியாயங்கள்... (இவைகளில் எந்தப் பிரச்சினைகளும் எமக்கு இல்லை.) என்றாலும் நாம் மார்க்க சட்டங்களில் அவர்களுக்கு இருந்த அறிவீனத்தை சுட்டிக்காட்டுகிறோம், மேலும் மடையர்களான அறிவீனர்களான இட்டுக்கட்டுகின்ற குற்றவாளிகளான இவர்களைப் போன்றவர்கள் தலைமைத்துவத்தில் இருப்பதற்கு தகுதியற்றவர்கள், அதற்கு அடுத்த இடத்தில் இருப்பதற்குக்கூட தகுதியற்றவர்கள்.” (கஷ்புல் அஸ்ரார்)

“நிச்சயமாக உமரின் செயற்பாடுகள் நிராகரிப்பு மற்றும் நயவஞ்சகத்தினால் உருவானவையாகும். மேலும் குர்ஆனில் வந்திருக்கின்ற வசனங்களுக்கு முரண்படுவனவாகவும் உள்ளன.” (கஷ்புல் அஸ்ரார்)

இந்த சமுதாயத்தில் நபியவர்களுக்குப் பிறகு மிகவும் சிறந்த மனிதராக நபியவர்களின் காலத்திலேயே அறியப்பட்டு, நபியவர்களால் அதிகமாக நேசிக்கப்பட்ட ஒரு மனிதர் அபூபக்ர் (ரழி) அவர்கள், நபியவர்கள் உயிர்வாழும்போதே மக்களைத் தொழுவிப்பதற்கு அபூபக்ர் (ரழி) அவர்களைத்தான் நபியவர்கள் தேர்வு செய்தார்கள். அவரைப் பற்றி நபியவர்கள் கூறிய செய்திகள் நம் எல்லோருடைய மனங்களிலும் ஆழமாகப் பதிந்திருக்கின்றன.

அபூபக்ர் (ரழி) அவர்களுக்கு அடுத்ததாக சிறப்பிக்கப்படுபவர் உமர் (ரழி) அவர்கள் “நீர் ஒரு வழியால் வந்தால் ஷைத்தான் இன்னொரு வழியால் போகிறான்” என்றார்கள் நபியவர்கள். உமர் (ரழி) அவர்களின் கொள்கை உறுதிக்கும் அவரது சிறப்புக்கும் நபியவர்களின் இந்த வார்த்தை மாத்திரம் போதுமானது.

முஸ்லிம்களின் முதலாவது கலீபாவாகவும் இரண்டாவது கலீபாகவும இருந்த இந்த இரண்டு மேதைகளையும் முஸ்லிம்கள் மட்டுமல்ல முஸ்லிம் அல்லாதவர்களும் இன்று வரை புகழுகிறார்கள். உலகம் சீர்பெற வேண்டுமென்றால் உமரின் ஆட்சி வரவேண்டும் என்று இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளே சொல்லுமளவு நீதி தவறாமல் ஆட்சி செய்தார்கள். ஆனால், அவர்கள் இருவரும் செய்த மிகப்பெரிய தவறு யூதர்களுக்கும் நெருப்பு வணங்கிகளுக்கும் இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளுக்கும் எதிராக கடும் நடவடிக்கைகளை எடுத்ததுதான். இதனால் அந்த சக்திகளெல்லாம் ஒன்று சேர்ந்து இவர்கள் இருவரையும் விமர்சிக்கவும் கீழ்த்தரமாக சித்தரிக்கவும் முயற்சித்தன, முயற்சிக்கின்றன.

யூதர்களின் வழித்தோன்றலான ஷீஆக்களும் அவர்களின் தலைவர் குமைனியும் இந்தப் பின்னணியில்தான் எமது இரண்டு கலீபாக்களைய்யும எதிர்க்கிறார்கள்.

குமைனி தன் கருத்தில் அபூபக்ர்(ரழி), உமர்(ரழி) ஆகிய இருவரைய்யும பின்வருமாறு அறிமுகப்படுத்துகிறார்.

1. இருவரும் குர்ஆனுக்கு முரண்பட்டார்கள்.
2. அல்லாஹ்வின் சட்டங்களில் விளையாடிவிட்டார்கள்.
3. இருவரும் அநியாயக் காரர்கள்.
4. மார்க்கச் சட்டங்கள் பற்றித் தெரியாதவர்கள்.
5. மடையர்கள். 6. இட்டுக்கட்டுகின்றவர்கள். 7. குற்றவாளிகள்.
8. உயர் தலைமைத்துவத்திற்கு தகுதியற்றவர்கள்.
9. அதற்கு அடுத்தபடியான பொறுப்புக்களுக்கும் தகுதியற்றவர்கள்.
10. நயவஞ்சகர்கள். 11. காபிர்கள்.
12. இவர்களிடத்தில் எமக்கு எந்தத் தேவையுமில்லை.

ஸுப்ஹானல்லாஹ் உலகில் சிறந்த மனிதர்கள் என்று அல்குர்ஆனும அஸ்ஸுன்னாவும் சொல்லி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள பற்றியே குமைனி இப்படி சொன்னால் மற்றவர்கள்….? (அல்லாஹ்தான் போதுமானவன்.)

ஷீஆக்களின் இமாம்கள்

இக்காலத்தில் வாழும் ஷீஆக்களான ராபிழாக்கள் அல்லது இமாமிய்யா, இத்னா அஷரிய்யா என்று அழைக்கப்படுபவர்கள் தங்களின் கொள்கைகள் அனைத்துக்கும் அலி (ரழி) அவர்களின் பரம்பரையில் வந்த 12 பேரில் தங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தப் 12 பேரையும் மனிதன், மலக்கு, இறைவன் என்று எல்லோரைய்யும விட உயர்வான இடத்தில் வைத்து மதிக்கின்றனர்.

உண்மையில் இந்த இமாம்கள் சொன்னதாக இவர்கள் சொல்லும் செய்திகளுக்கும் இமாம்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. ஷீஆக்களை முதலில் தண்டித்தவர்களாக இந்த இமாம்களே காணப்பட்டனர். இருந்தபோதிலும் ஷீஆக்கள் தங்களின் யூத சிந்தனைகளை அஹ்லுல் பைத்தில் வந்த சிலரின் பெயரில் முஸ்லிம்களுக்குள் பரப்பினர். இதனால் அஹ்லுல் பைத்தில் வந்த அந்த நல்ல மனிதர்கள் விடயத்தில் எல்லை மீறிய சிந்தனைகளை அவர்களுடைய எல்லா நூல்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

இங்கே, குமைனி அவர்கள் ஷீஆக்களின் இமாம்கள் பற்றி அதாவது அவருடைய இமாம்களைப் பற்றி அவரது நூல்களில் சொல்லியிருக்கும் செய்திகள் சிலவற்றை நோக்குவோம்.

ரப்பு என்றால் இமாம்.

“அவனே (எல்லாக்) காரியத்தையும் நிருவகிக்கின்றான். நீங்கள் உங்கள் இறைவனைச் சந்திப்பதை உறுதி கொள்ளும் பொருட்டு, அவன் (இவ்வாறு தன்) வசனங்களை விளக்குகின்றான்.” எனும் ஸூரதுர் ர.்.த்:2ம் வசனத்தை விளக்கும் குமைனி “உங்கள் இரட்சகன்” என்பது “உங்கள் இமாம்” என்று அர்த்தமாகும் என்று சொல்லிவிட்டு “அல்லாஹ்வின் பேச்சு எவ்வளவு தெளிவாக உள்ளது என்று பாருங்கள் அல்லாஹ் எவ்வளவு உறுதியாக உருவாக்கியிருக்கிறான் என்று பாருங்கள்” என்று குறிப்பிடுகிறார். (மிஸ்பாஹுல் ஹிதாயா இலல் ஹிலாபதி வல் விலாயா)

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரப்பு என்ற வார்த்தை படைப்பவன், காப்பவன், அழிப்பவன், பரிபாலிப்பவன் என்ற அர்த்தங்களைக் கொண்டது. இங்கு இமாம் என்று அர்த்தம் செய்வதற்கான எந்தத் தேவையுமில்லை. இருந்த போதிலும் இமாம்கள் மீதுள்ள எல்லை மீறலும் அவர்களை உயர்த்திக் காட்டவேண்டும் என்ற எண்ணமுமே குமைனி இந்தளவு தூரம் செல்வதற்கு காரணமாக இருந்திருக்கிறது என்று சொல்லலாம்.

மறுமையில் தன்னைப் படைத்த அல்லாஹ்வை சந்திப்பதுதான் ஓர் இறை விசுவாசிக்குக் கிடைக்கும் மிகப்பெரும் இன்ப அதிர்ச்சி. இதையே மாற்றிவிட்டார் குமைனி. எனவே, படைப்பதும் காப்பதும் அழிப்பதும் இமாம்கள்தான் என்ற ஷீஆக்களின் கருத்தை அப்படியே குமைனி பிரதி செய்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

அல்லாஹ் என்றால் இமாம்கள்தான் என்று சொன்னதற்குப்பிறகு இஸ்லாத்தில் வேறு என்ன இருக்கிறது…?

மனிதர்கள் சம்பாதித்தவற்றுக்கான தீர்ப்பினை அலி(ரழி) அவர்களே வழங்குவார்கள்.

"அலி (அலை) அவர்கள் எல்லாவற்றுக்கும் பொதுவான் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டவர்…. ஒவ்வொன்றின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் அலி (அலை) அவர்களின் அதிகாரத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஆத்மாவும் சம்பாதித்தவற்றுக்கு தீர்ப்பு சொல்லும் ஆற்றல் மிக்கவர். அவர் ஒவ்வொரு விடயத்துடனும் நிலையான கடவுள் சார் தன்மைகளுடன் இருக்கிறார்." (மிஸ்பாஹுல் ஹிதாயா இலல் கிலாபா வல் விலாயா)

லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ். இதை விடவும் ஒரு நிராகரிப்பு இருக்கவே முடியாது.

நிச்சயமாக இவர்கள் அல்லாஹ்வை வணங்கவில்லை அலி (ரழி) அவர்களையே வணங்குகிறார்கள், அல்லாஹ்வின் இடத்தில் அலி (ரழி) அவர்களையே வைத்துள்ளார்கள் என்பதற்கு இது மிகப் பெரிய ஆதாரம்.

இந்த உலகில் எல்லோரையும் விட சிறப்புக்குரியவரான நபி (ஸல்) அவர்கள் கூட அல்லாஹ் இரக்கம் காட்டினாலேயே நான் சுவனம் செல்வேன் என்றும் அவனது அருள் என்னை சூழ்ந்து கொள்ளவில்லை என்றால் நானும் வெற்றியடைய மாட்டேன் என்று சொல்கிறார்கள். (முஸ்லிம்) ஆனால், நபியவர்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த மனிதர்கள் செய்த அனைத்தையும் விசாரிப்பவர் அலிதான் என்று குமைனி நம்புகிறார் என்றால் நமது சகோதரர்கள் குமைனி விடயத்தில் எந்தளவு மடையர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது.

இஸ்லாமியப் புரட்சியின் தந்தை என்று போற்றப்படுகின்ற இவரின் நிலையே இதுவென்றால் அவரது சீடர்களை கேட்கவா வேண்டும்..? (அல்லாஹ் எம்மனைவரையும் பாதுகாப்பானாக)

அலி (அலை) அவர்கள் நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முன் வந்திருந்தால் அவரே நபியாக இருந்திருப்பார்.

"அலி (அலை) அவர்கள் நபியவர்கள் வருவதற்கு முன்னர் வந்திருந்தால் அவர் நபி (ஸல்) அவர்கள் வெளிப்படுத்தியதைப்போல இந்த மார்க்கத்தை வெளிப்படுத்தியிருப்பார். அவர் ஒரு ரஸூலாகவும் நபியாகவும் இருந்திருப்பார். ஏனெனில் நபியவர்களும் அலி அவர்களும் வெளிப்படையிலும் உள்ளார்ந்த அடிப்படையிலும் அந்தளவுக்கு ஒற்றுமைப்பட்டுள்ளார்கள்."
(மிஸ்பாஹுல் ஹிதாயா இலல் கிலாபதி வல் விலாயா)

ராபிழாக்கள் ஷீஆக்களின் பிரிவுகள் அனைத்தினதும் கொள்கைகளை உள்வாங்கியவர்கள் என்ற ஒரு வாதம் விமர்சகர்களிடம் உள்ளது. இங்கே குமைனியின் கூற்று அந்த வாதத்தில் உண்மை இருப்பதை தெளிவுபடுத்துகிறது.

ஏனெனில் ஷீஆக்களில் குராபிய்யா என்று சொல்லக் கூடிய குழுவினர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அலி (ரழி) அவர்களுக்கு வந்த செய்தியை நபியவர்களுக்கு மாற்றி கொடுத்துவிட்டதாகவும்

நபியவர்களும் அலி (ரழி) அவர்களும் வித்தியாசம் காணமுடியாத அளவுக்கு இருந்ததே அதற்கு காரணம் என்றும் குறிப்பிடுகின்ற அதே வேளை அதற்காக ஜிப்ரீல் (அலை) அவர்களை சபிப்பவர்களாகவும் இருக்கின்றனர்.

குமைனியின் இந்தக் கூற்று குராபியாக்களின் கூற்றை ஒத்ததாகவே உள்ளது. நபியவர்களுக்கு வஹி வரும் போது அலி (ரழி) அவர்கள் சிறியவராக இருந்ததே அவருக்கு வஹி வராதமைக்கான காரணம் என்பது குமைனியின் வாதம். குமைனியே வஹியை இறக்கி வைப்பதைப்போல உள்ளது அவரின் கதை.

தன் தூதுச் செய்தியை யாருக்கு கொடுக்கவேண்டும் என்பதை அல்லாஹ்தான் தீர்மானித்தான். அதன் அடிப்படையில்தான் நபியவர்களுக்கு வஹி இறங்கியது. ஆனால், அலிக்கும் இறங்கியிருக்கும் என்ற வாதமானது அல்லாஹ்வின் ஸ்தானத்தில் குமைனி தன்னை வைத்துக்கொண்டதைப்போல உள்ளது.

அத்தோடு அலி (ரழி) அவர்களின் உள்ளார்ந்த அம்சங்களும் நபியவர்களுடைய உள்ளார்ந்த அம்சங்களுடன் ஒத்திருந்தது என்று குறிப்பிடுகிறார். நிச்சயமாக உள்ளங்களைப் பற்றியும் அதில் உள்ளவற்றைப் பற்றியும் அறிந்தவன் அல்லாஹ் மாத்திரம்தான். ஆனால் குமைனிக்கு அலி (ரழி) அவர்களின் உள்ளார்ந்த அம்சங்கள் மாத்திரமல்ல நபி (ஸல்) அவர்களின் உள்ளாந்த அம்சங்களும் தெரிந்திருக்கிறது.

நிச்சயமாக குமைனி மற்றும் அவரது அடிவருடிகளின் கொள்கை என்பது தனியான ஒரு மதம். அதற்கும் இஸ்லாத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதையே இத்தகைய கூற்றுக்கள் உணர்த்துகின்றன.

(யா அல்லாஹ் எம் அனைவரையும் காப்பாற்றுவாயாக.)

அனைத்தையும் சூழ்ந்த நிலையான அறிவு இமாம்களுக்கு உண்டு.

“நபிமார்களுக்கும் அவர்களால் வசிய்யத் செய்யப்பட்ட இமாம்களுக்கும் றூஹுல் குதுஸ் என்று அழைக்கப்படுகின்ற உயிரோட்டமுள்ள உயர்ந்த அந்தஸ்து உள்ளது இந்த உலகத்தில் இருக்கின்ற மிகவும் சிறிய வித்துக்கள் தொடக்கம் அனைத்தையும் பற்றிய நிலையான அறிவை அவர்கள் கொண்டுள்ளனர்.” (அல் அர்பஊன ஹதீதன்)

குமைனி மற்றும் அவரின் சீடர்களின் இஸ்லாத்திற்கு எதிரான சிந்தனைகளுக்கு மற்றொரு ஆதாரமாக இது விளங்குகிறது.

ரூஹுல் குத்ஸ் என்பது ஜிப்ரீல் (அலை) அவர்களுக்குரிய பெயர். இங்கே குமைனி நபிமார்கள் இமாம்கள் அனைவரும் ஜிப்ரீல் என்று சொன்னால் அது நகைப்புக்கிடமான நம்பிக்கை. அல்லது அல்லாஹ்வின் உயிர் என்பது அந்தச் சொல்லின் பொருள். எனவே கருத்தின் அடிப்படையில் குமைனி அதைச்சொன்னால் அது அவரின் எல்லை மீறிய போக்கிற்கும் இஸ்லாத்திற்கு எதிரான சிந்தனைக்கும் ஓர் ஆதாரம்.

ஷீஆக்கள் அல்லாஹ்வுக்கு இருக்கின்ற அனைத்தையும் அவர்களின் இமாம்களுக்கே வழங்குகின்றனர். இங்கே குமைனி அல்லாஹ்வின் உயிரே இமாம்கள்தான் என்று சொல்லிவிட்டார். அல்லாஹ்வின் உயிராக அவர்கள் மாறிவிட்டால் எதுவும் மீதமில்லை.

அதிலும் எல்லாவற்றையும் அறிந்தவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே என்பது இஸ்லாத்தின் போதனை. நபியவர்களுக்குக் கூட இதில் விதிவிலக்கில்லை. அவர்களுக்குக் கூட எல்லா விடயங்கள் பற்றிய அறிவும் இல்லை. மற்றவர்களின் உள்ளங்களில் என்ன இருக்கிறது என்பது நபியவர்களுக்குத் தெரியாது. மற்றவர்கள் என்ன எண்ணத்துடன் பேசுகிறார்கள் என்பது நபியவர்களுக்குத் தெரியாது. அதனால்தான் “பேச்சில் சூனியம்

இருக்கிறது'' (புஹாரி) என்றார்கள். ஆனால், ஷீஆக்களின் இமாம்களுக்கு எல்லா விடயங்களையும் பற்றிய நிலையான அறிவு இருக்கிறதாம். ஸுப்ஹானல்லாஹ். (அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக)

நபிமார்கள், ரஸூல்மார்கள், வானவர்களை விடவும் உயர்ந்தவர்கள்.

“இறைவனிடம் இமாம்களுக்கு உள்ள அந்தஸ்த்தை இறைவனுக்கு நெருக்கமான மலக்கோ ரஸூலான நபியோ அடைந்துகொள்ள முடியாது என்பது எமது சிந்தனையின் அதி முக்கியமான தவிர்க்க முடியாத ஒரு நம்பிக்கையாகும்.” (அல்ஹுகூமா அல் இஸ்லாமிய்யா)

ஷீஆக்கள் தங்களின் இமாம்களை அல்லாஹ்வை விடவும் உயர்ந்த நிலையில் வைத்துப் பார்க்கிறார்கள். சில இடங்களில் அல்லாஹ்வின அதிகாரத்தை ஒத்த அதிகாரம் இமாம்களுக்கு இருப்பதாக குமைனி சொல்கிறார். இங்கே நபிமார்கள், ரஸூல்மார்கள், மலக்குகள் எல்லோரையும் விட இமாம்கள் உயர்ந்தவர்கள் என்ற கருத்தைச் சொல்கிறார். இதிலிருந்து இமாம்கள் விடயத்தில் இஸ்லாத்திற்கு முரணான பாரதூரமான கருத்துக்களை குமைனி கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது.

அல்லாஹ்விடத்தில் பாவம் செய்யாத ஒரு படைப்பினமாக மலக்குக்ள இருக்கிறார்கள். பாவமும் செய்து நன்மையையும் செய்கின்ற படைப்பினமாக மனிதர்களும் ஜின்களும் இருக்கிறார்கள். இந்த மனித வர்க்கத்தில் மிகவும் சிறந்தவர்களை அல்லாஹ் தனது ரஸூல்மார்களாகவும், நபிமார்களாகவும் ஆக்கினான். இவர்களை விட சிறந்த மனித உருவத்தில் உள்ள வேறொரு படைப்பு அல்லாஹ்விடத்தில் இல்லை.

ஆனால், குமைனியின் அறிவு அல்லாஹ்வை விடவும் மிஞ்சி விட்டது. மனிதர்கள், ஜின்கள் மலக்குகள் எல்லோரையும் விட மிகச் சிறந்த படைப்பாக இமாம்கள் இருப்பதாக அவர் சொல்கிறார்.

இதன் மூலம் அல்லாஹ்வுக்கே சிறந்தவர்களைக் காட்டிக் கொடுத்து பாடம் நடத்துகிறார். (நஊது பில்லாஹி மின்ஹா)

மரணிக்கும் வேளையில் இமாம்கள் சமுகம் தருகிறார்கள்.

“நாங்களும் மற்றவர்களும் நம்புகின்ற செய்திகள் சொல்லக் கூடிய ஒரு விடயம்தான்: நிச்சயமாக அலி (அலை) அவர்கள் மரணிக்கின்ற -வர்களிடம் வருகிறார். மரணிப்பவர் மு.ஃ.மினாக, காபிராக அல்லது முனாபிக்காக இருந்தாலும் சரியே.'' (அல் மீஆத் பி நழ்ரில் இமாம் அல் குமைனி)

அல்குர்ஆனின் கூற்றுப்படி மரணிக்கும் வேளையில் மலக்குகளே சமுகமளிக்கிறார்கள். வேறு ஒரு கூட்டம் சமுகமளிப்பதாக அல்குர்ஆனிலோ ஹதீஸிலோ குறிப்பிடப்படவில்லை. ஆனால் குமைனியின் அறிவைப் பாருங்கள். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் தெரியாத மிக முக்கியமான ஒரு விடயம் குமைனிக்குத் தெரிந்திருக்கிறது. குமைனி மற்றும் அவரது ஷீஆக்களின் இமாம்கள் மரணிக்கும் போது வருகிறார்கள் என்ற செய்தி இந்த உலகத்தில் குமைனி போன்ற ஷீஆக்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அல்லாஹ்விடம் இந்த செய்தியை குமைனி கலந்துரையாடினாரோ தெரியவில்லை. இவ்வளவெல்லாம் தெரிந்தவருக்கு அது ஒன்றும் பெரியவிடயமல்ல. (அல்லாஹ் எம்மனைவரையும் பாதுகாப்பானாக)

இமாம்களின் கருத்துக்களும் குர்ஆனின் போதனைகளும் ஒன்றே.

''இமாம்களின் போதனைகள் அல்குர்னின் போதனைகள் போன்றவைதான்'' (அல்ஹுகூமா அல் இஸ்லாமிய்யா)

அஸ்த.ஃபிருல்லாஹ். சாதாரன மனிதர்களான இத்தகையவர்களின் கருத்துக்கள் அல்லாஹ்வின் கருத்தைப் போன்றது என்று சொல்கிறார் குமைனி என்றால் இவர் சொல்லும் இஸ்லாம் நிச்சயமாக அல்லாஹ் சொன்னதல்ல என்பதை தெளிவாக உணர்த்துகிறார்.

ஷீஆக்களின் கூற்றுப்படி அவர்களின் இமாம்கள் அல்லாஹ்வுடன் நேரடியாகப் பேசுவதாகவும், அவர்களுக்கு வஹி வருவதாகவும் சொல்கின்றனர். இதனால் அந்த இமாம்கள் பெயரில் என்ன

சொல்லப்பட்டாலும் அதில் ஷீஆக்கள் கேள்விகள் கேட்பதில்லை. அதை இறைவனின் போதனைகளாக ஏற்றுக்கொள்கின்றனர். இதையே குமைனி வேறு வார்த்தைகள் மூலம் நமக்கு போதிக்கிறார். அல்லாஹ் நமது சகோதரர்களுக்கு விளக்கத்தைக் கொடுப்பானாக.

தவறும், மறதியும் அவர்களுக்கு இல்லை.

நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையில் தவறு நடந்திருக்கிறது "அபஸ" அத்தியாயத்தில் வரும் ஆரம்ப வசனங்களும், "அத்தஹ்ரீம்" அத்தியாயத்தில் வரும் ஆரம்ப வசனங்களும் நபியவர்களுக்கு நடந்த தவறை சுட்டிக்காட்டுவதாகவே உள்ளது. அதுபோன்று நபியவர்கள் நான்கு ரக்அத் தொழுகையை மறதியினால் இரண்டு ரக்அத்தாக தொழுவித்தார்கள். பின்பு ஸஹாபாக்கள் அதை நபியவர்களுக்கு ஞாபகப்படுத்தினார்கள். எனவே நபியவர்களுக்கு தவறும் மறதியும் ஏற்பட்டது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயம். ஆனால் குமைனியின் இமாம்களுக்கு அதெல்லாம் வராதாம்.

"இமாம்களுக்கு தவறோ மறதியோ வரும் என்று கற்பனை கூட செய்ய முடியாது." (அல்ஹுகூமா அல்இஸ்லாமியா) நஊது பில்லாஹி மின்ஹா.

எனவே, குமைனியின் இமாம்கள் எமது உயிரிலும் மேலான கண்மனி நாயகம் (ஸல்) அவர்களை விடவும் சிறந்தவர்கள் என்று சொல்கிறார். இஸ்லாத்தை அழிப்பதற்கு இதைவிட ஒரு பெரிய போராட்டம் இருக்க முடியாது என்று நினைக்கிறேன். அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக.

மனிதர்களின் செயல்களின் பட்டோலை இமாம் மஹ்தியிடம் காண்பிக்கப்படுகிறது.

"அறிவிப்புக்களின் படி; நிச்சயமாக எமது செயற்பாட்டுப் பட்டோலைகள் தற்காலத்தின் இமாமிடத்தில் (மஹ்தி) ஒரு வாரத்தில் இரண்டு தடவைகள் எடுத்துக்காட்டப்படுகின்றன." (அல் மீஆத் பி நழ்றில் இமாம் அல்குமைனி)

ஷீஆக்களின் மஹ்தி பற்றிய செய்திகள் சுவாரஷ்யமானவை அவர் பிறந்தது, வளர்ந்தது பற்றி ஷீஆக்கள் அறிவித்திருக்கும் செய்திகளை வாசித்தால் ஒரு சிறுபிள்ளை கூட இது கட்டுக்கதை என்று சொல்லிவிடும். சுருக்கமாகச் சொன்னால் ஷீஆக்களின் பதினோராவது இமாம் ஹஸன் அல்அஸ்கரி கனவில் திருமனம் செய்து, கனவில் குடும்பவாழ்க்கை நடாத்தி, நிஜத்தில் இந்தக் குழந்தையைப் பெற்றெடுத்ததாகவும் 1200ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை அவர் உயிர்வாழ்வதாகவும் ஷீஆக்கள் சொல்கிறார்கள். இதை நம்புவதற்கும் ஒரு கூட்டம் இருக்கிறது பாருங்கள்...

ஷீஆக்களின் கருத்துப்படி அல்லாஹ் என்பதெல்லாம் ஒரு வெறும் ஜடம்தான், அனைத்துமே அவர்களின் இமாம்களின் செயற்பாடுகள்தான் என்பது அவர்களின் நம்பிக்கை. இங்கு குமைனியும் அதே கருத்தைப் பிரதிபலிக்கிறார்.

நபி (ஸல்) அவர்கள் திங்கள் கிழமையும், வியாழக்கிழமையும் நோன்பிருந்தார்கள். அதற்கு என் இரட்சகனிடம் வாரத்தில் இரண்டு நாட்களில் அமல்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அந்த நாட்களில் நான் நோன்பாளியாக இருக்க விரும்புகிறேன் என்று நபியவர்கள் கூறினார்கள்.

குமைனி இந்த ஹதீஸை அப்படியே மாற்றி மஹ்தியிடம் வாரத்தில் இரண்டு நாட்கள் அடியார்களின் செயற்பாடுகள் எடுத்துக் காண்பிக்கப்படுவதாக குறிப்பிடுகிறார். இதை விடவும் இஸ்லாத்திற்கும அதன் கொள்கைகளுக்கும் எதிரான கருத்து வேறேதாவது இருக்குமா? என்று எனக்குத் தெரியவில்லை.

அல்லாஹ் அடியார்களின் செயற்பாடுகளுக்கு கூலி வழங்குவதற்காக அவற்றைப் பார்க்கிறான். மஹ்தி எதற்காக பார்க்க வேண்டும்? ஏனெனில் ஷீஆக்களின் நம்பிக்கைப்படி அடியார்களின் செயற்பாடுகளுக்கு கூலி வழங்குவது அவர்களின் இமாம்கள்தான். எனவே, அடியார்களின் செயற்பாடுகள் அனைத்தையும் அவர்கள் பார்த்துத்தானே ஆக வேண்டும்.

(இஸ்லாத்தை முற்றாக அழிக்கின்ற இத்தகைய சிந்தனைகளிலிருந்து அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.)

நபியின் பிறப்பை விட மஹ்தியின் பிறப்புத்தான் முக்கியமானது.

“முஸ்லிம்களைப் பொறுத்தவரை இமாம் மஹ்தியின் பிறப்பு பெரியதொரு பெருநாளாகும். நபி முஹம்மது (ஸல்) அவர்களின் பிறப்பையும் விட மிகவும் பெரிய ஒரு விடயமாக அது கணிக்கப்படுகிறது.” (வஸிய்யதுல் குமைனி)

குமைனி முஸ்லிம்கள் என்று சொல்வது ஷீஆக்களைத்தான். ஏனெனில் ஷீஆ அல்லாதவர்களை அவர் முஸ்லிம் என்று ஏற்றுக் கொள்வதில்லை. எனவே, குமைனியின் முஸ்லிம்களான ஷீஆக்களிட்ம பிறக்காத மஹ்தியின் பிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாம். அதுவும் இந்த உலகிற்கே அருட்கொடையாக அனுப்பப்பட்ட நபியின் பிறப்பையும் விட அதி முக்கியத்துவம் வாய்ந்ததாம். சகோதரர்களே! இந்தக் கூட்டம் உண்மையில் நபியைப் பின்பற்றுகிறார்கள் என்று இப்போதும் நினைக்கின்றீர்களா? அப்படியென்றால் அல்லாஹ்தான் உங்களைப் பாதுகாக்க வேண்டும்.

ரபீஉல் அவ்வல் பிறை 12ல் நபியவர்களின் பிறந்ததினம் பலராலும் ஞாபகப்படுத்தப்படுகிறது. இதற்காக விழாக்கள் எடுக்கப்படுகிறது. இது ஷீஆக்களின் முக்கிய ஒரு நாளாகவும் கணிக்கப்படுகிறது இந்தத் தினத்தைக் கொண்டாடாத ஊர்களிலே ஷீஆக்களின் முழுமையான செலவில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஷீஆக்கள் இவ்வாறு செலவிடுவது நபியவர்களின் பிறந்த தினம் என்பதற்காகவா? அல்லது அவர் இறந்த தினம் என்பதற்காகவா? என்று தெரியவில்லை. ஏனெனில் நபியவர்கள் அந்த தினத்தில் பிறந்தார்கள் என்பதை விட மரணித்தார்கள் என்பதற்கான ஆதாரமே பலமானது.

இந்த உலகில் மிகச்சிறந்த ஒரு மனிதனின் பிறப்பை விடவும். நாம் மதிக்கக்கூடிய மற்றவரின் பிறப்புத்தான் சிறந்தது, அவரது பிறப்புத்தான் உன்னதமானது என்று சொல்லும் கூட்டத்தை விட்டும் அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.

மஹ்தி மறைந்திருப்பதன் மர்மம்:

“அல்லாஹ் மஹ்தியின் வயதை இப்படி நீட்டியிருப்பதற்கான மர்மம் (மஹ்திக்கு வழங்கப்பட்டுள்ள) இந்தப் பெரிய பொறுப்பை நபிமார்கள் தொடக்கம் இந்த உலகில் உள்ள மனிதர்களில் எவராலும் நிறைவேற்ற முடியாமல் போய் விட்டது. மேலும் மஹ்தியின் முன்னோர்கள் எதற்காக அனுப்பப்பட்டார்களோ அதை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை என்பதுதான்.” (மஹ்தியின் பிறந்த தின சொற்பொழிவில் குமைனி அவர்கள் சொன்னது. ஹி.1400.8.15)

ஷீஆக்களின் கருத்துப்படி இந்த உலகத்தை பன்னிரெண்டு இமாம்கள் ஆளும் வரை இந்த உலகம் அழியாது. ஆனால் 11வது இமாம் ஹஸன் அல்அஸ்கரி இளம் வயதில் பிள்ளை இல்லாமல் மரணித்து -விட்டார்கள். இது ஷீஆக்களுக்கு பெரும் தலையிடியாக அமைந்தது. ஏனெனில் முந்திய இமாமின் மூத்த பிள்ளைதான் அடுத்த இமாமாக வரவேண்டும் என்பது அவர்களின் கொள்கை. இமாம் பிள்ளை இல்லாமல் மரணித்தது அவர்களின் முதற்கொள்கையிலேயே பெரும் சிக்கலை உருவாக்கியது.

இந்த சிக்கல்களிலிருந்து விடுபடும் வகையில் ஷீஆக்கள் உருவாக்கிய கற்பனைக் கதைதான் 11வது இமாமுக்கு குழந்தை பிறந்த கதை. பதினோராவது இமாமுக்கு ஒரு குழந்தை பிறந்ததாகவும் அதைப் பறவைகளிடம் கொடுத்து அவர் வளர்த்ததாகவும் ஷீஆக்கள் கதை கூறுகிறார்கள். அந்தக் குழந்தை முஹம்மத் என்றும் அவர்தான் பன்னிரெண்டாவது இமாம் என்றும் அவர் தற்போதும் ஸாமுர்ரா என்ற மலைக்குகையில் மறைந்திருப்பதாகவும் ஷீஆக்கள் சொல்கிறார்கள். எனவே, அவர்களின் பன்னிரெண்டாவது இமாம் ஆயிரத்துக்கும் அதிகமான வருடங்கள் சென்றுவிட்ட பிறகும் இன்னும் அவர் உயிருடன் இருக்கிறார் என்று ஷீஆக்கள் நம்புகிறார்கள்.

பொய்யாக உருவாக்கப்பட்ட இந்தக் கொள்கையை ஷீஆக்கள் தங்களின் பிரச்சாரங்களில் அதிகமாக சொல்வதும், அவர் பிறந்த விழா, மறைந்த விழா என்று விழா எடுப்பதும், அவரது வருகையை

எதிர்பார்த்து மக்களைத் தயாராகுமாறு பணிப்பதும் யாவரும் அறிந்த விடயம். இதை பெரிதுபடுத்துவதன் மூலம் மக்கள் மனங்களில் பதியவைத்து அது பொய்யானது என்பதை மறக்கச் செய்யும் நுட்பத்தை ஷீஆக்கள் கையாள்கிறார்கள்.

“குற்றமுள்ள மனசு குறுகுறுக்கும்” என்று சொல்வதைப் போல பொய்யான இந்தக் கொள்கையால் வந்த மஹ்தி இன்னும் வராமல் இருப்பது மனிதர்களுக்கு சந்தேகத்தை உருவாக்கலாம் என்ற ‘குறுகுறுப்பு’ குமைனியின் மனதிலும் வந்ததனால்தான் மஹ்தி மறைந்திருப்பதற்கான தத்துவத்தை மக்களுக்கு அவர் விளக்குகிறார். ஆனால், அவரது விளக்கத்திற்கும் மஹ்தி வராமல் இருப்பதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை..

உண்மையில் இந்த மஹ்திய சிந்தனை முஸ்லிம்களுக்குள் பிளவுகளை உருவாக்கி முஸ்லிம்களை அழிப்பதற்காகவே ஷீஆக்களால் பிரயோகிக்கப்படுகிறது. மஹ்தி வருவதற்கான பாதையை செப்பனிட வேண்டும் என்ற அடிப்படையில் அமைதியாக இருக்கும் நாடுகளுக்குள் உள்வீட்டு மோதல்களை உருவாக்குவதும், பலாத்காரத்தின் அடிப்படையில் ஷீஆக் கொள்கையை ஏற்றுக்கொள்ளச்செய்வதும் இதன் ஓர் அங்கமாகவே இன்று நடைபெறுகிறது.

சென்ற காலங்களில் இங்கு நாம் சொல்வதை சிலவேளைகளில் ஷீஆக்கள் பொய்ப்பிக்க முனைந்தாலும் ஊடகத்துறை வளர்ச்சி அடைந்த இந்தக்காலத்தில் அவ்வாறு செய்வது அசாத்தியமானதாகும். ஏனெனில் ஷீஆக்களால் உருவாக்கப்பட்ட மஹ்தியப் படைகள் இதையே இன்றைக்கு செய்துகொண்டிருக்கிறன.

எனவே, மஹ்தி பற்றிய குமைனியின் இந்தக் கருத்து எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாய் உள்ளதே தவிர வேறேதும் இல்லை.

அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.

முஸ்லிம்கள்

முஸ்லிம்கள் மறுமையில் அல்லாஹ்வின் அருளிலிருந்து தடுக்கப்படுவார்கள். அது ஷீஆக்களுக்கு மட்டுமுரியது.

குமைனி அவர்கள் (அல்அர்பஊன ஹதீதன்) என்ற நூலில் “அமாலிஸ்ஸதூக்” என்ற நூலிலிருந்து பின்வரும் அறிவிப்பைக் கொண்டு வருகிறார்.

“அவர்களது தீமைகளை அல்லாஹ் நன்மைகளாக மாற்றுவான், அல்லாஹ் மன்னிப்பவனாகவும் இரக்கமுடையவனாகவும் இருக்கிறான்.” (புர்கான் 70) ‘மறுமை நாளில் பாவம் செய்த ஒரு மு.ஃ.மின் (ஷிஆ) கொண்டு வரப்படுவான். கேள்வி கணக்கிற்காக நிறுத்தப்படுவான். மற்ற மனிதர்கள் எவருக்கும் தெரியாத அடிப்படையில் அல்லாஹ் அவனிடம் விசாரிப்பான். அவனுடைய பாவங்களை அவனுக்கு அல்லாஹ் எடுத்துக்காட்டுவான். அந்தப் பாவங்கள் அனைத்தையும் அவன் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு அவனது பாவங்கள் அனைத்தையும் நன்மையாக மாற்றிவிட்டு மனிதர்களுக்கு காட்டுமாறு எழுத்தாளர்களுக்கு இறைவன் சொல்வான். (பின்பு அந்த ஏட்டைப் பார்த்த) மக்கள் இந்த அடியான் எந்தப் பாவமும் செய்யவில்லையே என்று கூறுவார்கள். அவனை சுவர்க்கத்திற்கு கொண்டு செல்லுமாறு அல்லாஹ் ஏவுவான். இதுவே இந்த வசனத்தின் விளக்கம். இது பாவம் செய்த எமது ஷீஆக்களுக்கு மாத்திரமே கிடைக்கும்.”

இந்த அறிவிப்பைக் கொண்டு வந்த பின்பு இதற்கு குறிப்பு எழுதும் குமைனி பின்வருமாறு எழுதுகிறார்.

“நிச்சயமாக இந்த விடயம் ஷீஆக்களுக்கு மாத்திரமுரியது என்பதும் ஏனைய மக்களுக்கு இப்படி கிடைக்காது என்பதும் தெளிவானது. ஏனெனில் பரிசுத்தமான பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட அலியினுடைய தலைமைத்துவத்தையும் அவரினால் வஸிய்யத்துச்

செய்யப்பட்டவர்களின் தலைமைத்துவத்தையும் ஏற்றுக்கொள்வதின் மூலமாகவே அன்றி ஈமான் வராது. இதை அடுத்துவரும் தலைப்பில் நாம் தெளிவுபடுத்துவோம். விலாயத்தை நம்பாவிட்டால் அல்லாஹ்வையும் ரஸூலையும் நம்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது." (அல்அர்பஊன ஹதீதன்)

ஷீஆக்களின் நம்பிக்கைப்படி ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று சொன்னால் மாத்திரம் போதாது, மாறாக அலி (ரழி) அவர்களும் அவரின் பரம்பரையும்தான் தலைமைத்துவத்திற்கு தகுதியானவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு ஸஹாபாக்களிலிந்து நீங்க வேண்டும். ஸஹாபாக்கள் கெட்டவர்கள் என்று சாட்சி சொல்ல வேண்டும். இது ஷீஆக்களின் நூல்களில் பதிவு செய்யப்பட்டிருப்பதோடு, ஷீஆ அல்லாதவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் போது சொல்லப்படும் கலிமா தொடர்பான வீடியோ காட்சிகளிலும் தெளிவாக உள்ளது. இந்த வீடியோ காட்சிகளைப் பார்த்த ஷீஆக்கள் இதில் வரும் யாஸிர் அல் ஹபீப் என்பவர் ஷீஆ அல்ல. அவர் அமெரிக்காவின் கைக்கூலி என்றும் ஷீஆக்களைப் பற்றி தப்பபிப்பிராயங்களை உருவாக்கவே அவர் செயற்படுகிறார் என்றும் கிளம்பியடித்தனர். இப்போது குமைனிக்கு என்ன சொல்லப்போகிறார்களோ தெரியவில்லை. பாவம் விசயம் தெரியாமல் பதறியடித்தவர்களின் நிலைதான் இங்கு கவலைக்கிடமானது.

இறைவனின் நீதியைக் கொச்சைப் படுத்துவதைப் போலவும் இறைவன் மற்றவர்களுக்குக் காட்டுவது பொய்யானது. திரைமறைவில எல்லாம் முடிந்ததற்குப் பிறகுதான் மக்கள் பார்க்கிறார்கள். இறைவனின் விசாரணை பகிரங்கமானது அல்ல. எனும் இஸ்லாத்திற்கு முரணான பல கருத்துக்களை உள்ளடக்கிய "அமாலிஸ்ஸதூக்" என்ற ஷீஆக்களின் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள செய்தியைக் குறிப்பிட்டு அதற்கு மறுத்துப் பேச வேண்டிய குமைனி அந்த அறிவிப்பை ஆதரித்தது மாத்திரமல்லாமல் தங்களின் இமாம்கள்

விடயத்தில் ஷீஆக்கள் வைத்திருக்கும் ஏனைய நம்பிக்கைகளையும் பின்வருமாறு விளக்குகிறார்.

- ஷீஆக்களின் இமாம்கள் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள்.
- பரிசுத்தமானவர்கள்.
- அவர்களை ஏற்காமல் விட்டவர் ஈமான் கொண்டவராக ஆக மாட்டார்.
- ஈமான் கொள்வதற்கு அல்லாஹ்வையும் ரஸூலையும் மாத்திரம் ஏற்றுக்கொண்டால் போதாது.

குமைனியின் கருத்துப்படி பார்த்தால் நபியவர்கள் கூட ஈமான் கொள்ளவில்லை. ஏனெனில் நபியவர்கள் ஷீஆக்கள் குறிப்பிடும் இமாம்களின் தலைமைத்துவம் பற்றி ஈமான் கொண்டதாக எந்த செய்தியும் அறிவிக்கப்படவில்லை. அது மாத்திரமல்லாமல் தனது பிரச்சாரத்தின்போது அல்லாஹ்வையும் ரஸூலையும் ஏற்றுக்கொள்ளு -மாறே சொன்னார்கள். தன்னிடம் இஸ்லாத்தை ஏற்க வந்தவர்களிடம் முஸ்லிம்களாகிய நாம் அறிந்துவைத்துள்ள "லாயிலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவைச் சொல்லி தான், அல்லாஹ்வின் ரஸூல் என்று சாட்சி சொல்லுமாறே வேண்டினார்கள். இமாம்கள் பற்றி எந்த இடத்திலும் சொல்ல வில்லை. தன்னிடம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இமாம்களை விசுவாசித்தல் பற்றி சொல்லிக கொடுக்கவில்லை. எனவே இப்படிப்பார்க்கும்போது இந்த உலகத்தில் குமைனியையும் அவரது சீடர்களையும் தவிர இறை விசுவாசிகள் என்று எவரும் இல்லை. இந்த உலகத்தில் வந்த நபிமார்கள் ரஸூல்மார்கள் எவரும் இதற்கு விதிவிலக்கல்ல. குமைனியின் கருத்துப்படி அவர்களும் ஈமான் கொண்டவர்களாக இருக்கமுடியாது. ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் பாலும் தங்களின் பாலுமே அழைத்தார்கள் இமாம்களை ஏற்றுக்கொள்வதின் பால் அழைக்கவில்லை. எனவே அவர்கள் எவரும் மு.்.மின்களாக இருப்பதற்கான வாய்ப்பு இல்லை. நபிமார்கள் கூட ஈமான் கொள்ளவில்லை என்றால் வேறு யார்தான் ஈமான் கொண்டிருப்பார்கள்..?

(அல்லாஹ் இந்தக் கூட்டங்களிலிருந்து எம் அனைவரையும் பாதுகாப்பானாக.)

முஸ்லிம்கள் நஜீஸானவர்கள், அவர்களின் சொத்துக்களை எடுப்பது ஹலால், அவர்களுக்காக தொழக்கூடாது.

"...ஷீஆக்கள், திம்மி, முஆஹித் போன்ற அனுமதி அற்ற முறையில் சொத்தை எடுப்பது தடை செய்யப்பட்டவர்களிடமிருந்து கொள்ளையிடப் படாததாக இருக்கவேண்டும்... மேலும் சொத்துக்களை கனீமத்தாகப் பெற்று அதில் ஐந்தில் ஒன்றை இமாம்களுக்கு கொடுக்கவேண்டும் என்ற நிலையில் உள்ள எதிரிகளுடன் அஹ்லுஸ்ஸுன்னாக்களை இணைப்பதுதான் பலமான கூற்று. எந்த முறையிலாவது எந்த அடிப்படையிலாவது அஹ்லுஸ்ஸுன்னாக்களின் சொத்துக்களை எடுப்பது கூடும் என்பது தெளிவான விடயமாகும்." (தஹ்ரீருல் வஸீலா)

"இஸ்லாத்தைப் பின்பற்றுவதாகச் சொல்கின்ற ஹவாரிஜ், அஹ்லுஸ்ஸுன்னா போன்று காபிர்கள் என்று தீர்ப்பு வழங்கப்பட்டவர்கள், மதம் மாறியவர்கள் என்று எந்த வகையான காபிராக இருப்பினும் அவனுக்காக தொழுகை நடாத்தக்கூடாது." (தஹ்ரீருல் வஸீலா)

"ஹவாரிஜ், அஹ்லுஸ்ஸுன்னா அவர்கள் இருவரையும் அல்லாஹ் சபிப்பானாக, அவர்கள் இருவரும் நஜீஸானவர்களே, அதில் எந்த சந்தேகமுமில்லை." (தஹ்ரீருல் வஸீலா)

குமைனியின் மிகவும் நெருங்கிய நண்பர் ஹுஸைன் அல் மூஸவி அவர்கள் தனது 'கஸ்புல் அஸ்ரார் வ தப்ரிஅதில் அஇம்மதில் அத்ஹார்' என்ற நூலில் தன்னிடம் குமைனி சொன்னதாக பின்வருமாறு எழுதுகிறார்: "ஹுஸைனே! இப்போது இமாம்களின் உபதேசங்களை நிறைவேற்றுவதற்கான காலம் கைகூடிவிட்டது. அஹ்லுஸ்ஸுன்னாக்களின் இரத்தங்களை நாம் ஓட்டுவோம்,

அவர்களின் பிள்ளைகளை நாம் கொலை செய்வோம், அவர்களின் பெண்களை மானபங்கப்படுத்துவோம், அவர்கள் எவரையும் தண்டனையிலிருந்து தப்புவதற்கு நாம் விடமாட்டோம், அவர்களது சொத்துக்கள் அனைத்தும் ஷீஆக்களுக்கே உரியதாக ஆக்கப்படும்"

"அஹ்லுஸ்ஸுன்னாக்கள் அறுத்தவற்றை சாப்பிடக் கூடாது." (தஹ்ரீருல் வஸீலா)

"அஹ்லுஸ்ஸுன்னாக்கள் வேட்டையாடுவதற்காக ஒரு நாயை அனுப்பினால் அந்த நாய் எதையாவது வேட்டையாடி வந்தால் அதையும் சாப்பிடக்கூடாது" (தஹ்ரீருல் வஸீலா)

என்ன? ஆச்சரியமாக இருக்கிறதா?

அல்லாஹ், நபி (ஸல்) அவர்கள், ஸஹாபாக்கள் பற்றி நாம் நினைக்க முடியாத அளவுக்கு கீழ்த்தரமாக பேசிய, எழுதிய ஒருவர் ஏனையவர்களைப் பற்றி இப்படித்தான் எழுதுவார். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆனால், இஸ்லாமியப்பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றவர்களை சமூகத்தில் குழப்பவாதிகள் என்றும், ஷீஆக்களுக்கு எதிராக பேசுபவர்களை வஹ்ஹாபிகள் என்றும் சித்தரிக்கும் ஷீஆக்கள் உலக முஸ்லிம்களின் ஒற்றுமைக்குரிய உதாரண புருசராக காட்டும் ஒரு மனிதர் இவ்வாறு முஸ்லிம்கள் பற்றிப் பேசியிருப்பார் என்பது எவரும் எதிர்பார்க்காத விடயமாக இருக்கலாம்.

அண்மையில் கல்குடாத்தொகுதியில் ஷீஆக்களால் விநியோகிக்கப்பட்ட சிறு நூல்களில் "உலக முஸ்லிம்களின் ஒற்றுமைக்கு குமைனி, அலி ஸீஸ்தானியின் உபதேசங்கள்" என்ற கையேடும் இருந்தது. ஆக, உலக முஸ்லிம்களின் ஒற்றுமை பற்றிப் பேசும் ஒரு மனிதரிடம் முஸ்லிம்கள் பற்றி இருக்கும் கருத்துக்களைப் பார்த்தீர்களா? (இன்ஷா அல்லாஹ் அலி ஸீஸ்தானி பற்றி தனியாக ஒரு நூலில் அவதானிக்கலாம்.)

பாமர முஸ்லிம்களை ஏமாற்றி அவர்களை அழிப்பதற்கான முயற்சியில் ஈடுபடும் ஷீஆக்கள் முஸ்லிம்களின் ஒற்றுமை பற்றி அதிகமாக பேசுவது வழமை. அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எதிராக பேசி மக்களின் கவனங்களை திசை திருப்பி அதற்குள் ஒழிந்து கொள்ளும் ஷீஆக்கள், இனங்காணப்படும் போது தங்களுக்கு எதிராக வேலை செய்வதை தடுக்கும் வகையில் முஸ்லிம்களின் ஒற்றுமை பற்றியும் அதிகம் கவலைப்படுவார்கள். இவ்வாறு பேசுவதெல்லாம் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத் காரர்களை சந்திக்கும் போதுதான். ஆனால், ஷீஆக்கள் தங்களுக்குள் பேசும் போது முழுக்க முழுக்க குமைனி மற்றும் அவருடைய ஆசான்களின் இவ்வாறான கருத்துக்களை பரப்புவதுதான் அவர்களது கொள்கை. வெளிப்படையாக எல்லோரும் வாசிக்கக் கூடிய ஒரு நூலில் குமைனி முஸ்லிம்களுக்கு எதிராக இவ்வாறு சொல்லியிருந்தால் மறைமுகமாக எவ்வளவு பேசியிருப்பார், செய்திருப்பார். அல்லாஹ்தான் எம்மைப் பாதுகாக்க வேண்டும்.

சந்தர்ப்பம் கிடைக்கும்போது முஸ்லிம்களைத் தீர்த்துக்கட்ட வேண்டும் என்பது ஷீஆக்களின் அடிமனதில் ஊறிப்போன ஒரு விடயம். அது அவர்களின் கொள்கை, அவ்வாறுதான் அவர்கள் தங்களின் கலாபீடங்களிலும், நிறுவனங்களிலும் பயிற்றுவிக்கப்படு -கிறார்கள். அதனால்தான் இன்று சிரியாவிலும், ஈராக்கிலும், யெமனிலும், ஈரானிலும் அஹ்லுஸ்ஸுன்னாக்களின் கொலை நூற்றுக்கணக்கில் நாளாந்தம் நடந்துகொண்டிருக்கிறது. முஸ்லிம்களின் ஒற்றுமை பற்றி அவர்கள் பேசுவதன் கருத்து “முஸ்லிம்கள் அனைவரும் ஷீஆக்கொள்கையை ஏற்று அதில் ஒற்றுமையாக இருக்கவேண்டும்.” என்பதுதான். நம்மில் சிலர் விளங்குவதைப்போன்று அல்ல.

உலக முஸ்லிம்களின் ஒற்றுமை பற்றி பொது இடங்களில் பேசி தன் சீடர்கள் மூலம் அதை உலகம் முழுக்கப் பரப்பி பாமர முஸ்லிம்களின் உள்ளத்தில் இடம் பிடித்த குமைனி “ஒற்றுமை வாரம்” என்ற ஒரு பிரகடனத்தையே செய்தார். ஆனால், எவ்வளவு நடித்தாலும் நடிப்பு நீண்டகாலம் நிலைத்திருக்காது என்பதை அல்லாஹ் மக்களுக்கு தெளிவுபடுத்தி விட்டான்.

தனது இந்தக் கருத்தில் குமைனி அஹ்லுஸ்ஸுன்னாக்களை புகழும் முறையைப் பாருங்கள்.

01. இஸ்லாமிய அரசின் கீழ் வரி செலுத்தி வாழுகின்ற யூத, கிறிஸ்தவர்களை விடவும் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் கீழ்தரமானவர்கள்.
02. அஹ்லுஸ்ஸுன்னாக்களின் சொத்தை எவ்வாறான வழியிலும் எடுக்கலாம்.
03.அஹ்லுஸ்ஸுன்னாக்கள் காபிர்கள்.
04. அஹ்லுஸ்ஸுன்னாக்கள் மரணித்தால் அவர்களுக்காக தொழுகை நடாத்தக் கூடாது.
05. அஹ்லுஸ்ஸுன்னாக்களை அல்லாஹ் சபிப்பானாக.
06. அஹ்லுஸ்ஸுன்னாக்கள் நஜீஸானவர்கள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.
07. அஹ்லுஸ்ஸுன்னாக்களை நாம் கொலை செய்வோம்.
08. அவர்களைத் தண்டிப்போம்.
09. அஹ்லுஸ்ஸுன்னாக்களின் ஆண்களைக் கொலை செய்து பெண்களை மானபங்கப்படுத்துவோம்.
10. அஹ்லுஸ்ஸுன்னாக்களின் சொத்துக்களை ஷீஆக்களின் உடமையாக மாற்றுவோம்.
11. அஹ்லுஸ்ஸுன்னாக்கள் அறுத்தவற்றை ஷீஆக்கள் சாப்பிடக்கூடாது.
12. அஹ்லுஸ்ஸுன்னாக்கள் வேட்டையாடியவற்றை சாப்பிடக் கூடாது.

ஸுப்ஹானல்லாஹ் நம்மில் பலர் ஆன்மீகத் தலைவர், உதாரண புருசர் என்று நினைத்திருந்த குமைனி நம்மைப் பற்றி என்ன சொல்கிறார் பார்த்தீர்களா.? ஒற்றுமை வாரம், குத்ஸ் தினம் என்ற பெயரில் முஸ்லிம்களிடம் தன் முகத்தை மறைத்துக்கொள்ள முனைந்த குமைனியின் உண்மை முகத்தை அல்லாஹ் வெளிப்படுத்தி விட்டான் அல்-ஹம்துலில்லாஹ்.

இத்தகைய நடிகர்களிலிருந்து அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக.

க∴பதுல்லாஹ்வும் குமைனியும்

ஹி.1407ஆம் ஆண்டு க∴பதுல்லாஹ்வில் ஓர் ஆர்ப்பாட்டம் ஷீஆக்களால் மேற்கொள்ளப்பட்டது ஆரம்பத்தில் இது அமைதியான வழியில் இருந்தபோதிலும் சொற்ப நேரத்தில் அது பெரும் கலவரம்போல வெடித்தது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் ஈரானியக் குடியரசின் படைகளும் இருந்தன. அவர்கள் குமைனியின் உருவப் படங்களை ஏந்திய வண்ணம் பிரச்சினைகளைத் தோற்றுவித்தனர். அமைதியாக ஹஜ்ஜில் ஈடுபட்டிருந்த மக்களின் வணக்க வழிபாடுகளுக்கு குந்தகம் விளைவித்தனர். பலர் கொலை செய்யப்பட்டதுடன காயங்களுக்குள்ளாகினர், பல இலட்சக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

குமைனி ஆட்சிக்கு வந்ததும் “பைத்துல் மக்திஸையும் க∴. பதுல்லாஹ்வையும் இஸ்லாத்தின் எதிரிகளிடமிருந்து மீட்போம்” என்று அறிவித்தார். எனவே, க∴பதுல்லாஹ் என்பது தற்போது முஸ்லிம் அல்லாதவர்களால் ஆளப்படுவதாக அவர் நினைக்கிறார்.

க∴பதுல்லாஹ்வை ஏன் மீட்க வேண்டும்? இப்போது அதில் அமைதியாக எல்லோரும் தங்களின் வணக்க வழிபாடுகளை நிறைவேற்றி வருகிறார்கள்தானே என்று குமைனியிடம் கேட்டால் அதற்கு ஹுஸைன் அல் மூஸவி அவர்கள் தனது ‘கஸ்புல் அஸ்ரார் வ தப்ரிஅதில் அஇம்மதில் அத்ஹார்’ என்ற நூலில் குமைனி சொன்னதாகச் சொல்லும் தகவல் விடை சொல்கிறது.

“பூமியிலிருந்து மக்காவையும் மதீனாவையும் நாம் அழிப்போம், ஏனெனில் இந்த இரண்டு நகரங்களும் வஹ்ஹாபிகளின் ஒதுங்குமிடமாக மாறிவிட்டது. அல்லாஹ்வினால் சங்கைப்படுத்தப்பட்ட பரகத் பொருந்திய கர்பலா முஸ்லிம்கள் அனைவரினதும் தொழுகைக்கான கிப்லாவாக இருப்பது அவசியமாகும். இதன் மூலம் நாம் இமாம்களின் கனவை நிறைவேற்றுவோம்.”

ஸுப்ஹானல்லாஹ். ஒற்றுமை வீரர், வீர வேங்கையின் க∴. பதுல்லாஹ் பற்றிய கருத்தைப் பார்த்தீர்களா?

ஷீஆக்களிடம் க∴பதுல்லாஹ் சிறப்புப்பொருந்திய ஓர் இடமல்ல. கர்பலா உலகின் க∴பாவாகவும், எல்லோராலும் மதிக்கப்படும் இடமாகவும் இருக்க வேண்டும் என்பது அவர்களின் கொள்கையும் இலட்சியமுமாகும் அதே கொள்கைதான் குமைனியிடமும் இருக்கிறது என்பதற்கு இதுவோர் எடுத்துக்காட்டு.

இஸ்லாமிய வரலாற்றில் ஷீஆக்களால் க∴பதுல்லாஹ் தாக்கப்பட்டிருக்கிறது. ஷீஆக்களின் ஒரு குழுவான கராமிதாக்கள் கதீபிலே ஒரு ஆலையத்தைக் கட்டிவிட்டு அதை நோக்கியே எல்லோரும் தொழவேண்டும் என்று பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் ஆத்திரமடைந்த ஷீஆக்கள் க∴பதுல்லாஹ்வுக்கு எதிராக படையெடுத்தார்கள். க∴. பதுல்லாவை உடைத்தார்கள், ஹுஜ்ஜாஜிகளை கொலைசெய்தார்கள். அவர்களின் சொத்துக்களை சூறையாடினார்கள்.ஹஜருல் அஸ்வதை எடுத்துச்சென்று தங்களின் ஆலயத்தில் வைத்தார்கள். இருபத்தி இரண்டு வருடங்கள் க∴பதுல்லாஹ்விலே ஹஜருல் அஸ்வத் இருக்கவில்லை. பின்பு உஸ்மானிய அரசு ஹஜருல் அஸ்வதின் துண்டுகளை பெருந்தொகைப் பணங் கொடுத்து வாங்கி க∴. பதுல்லாவில் வைத்தது.

கராமிதாக்களின் பரம்பரையில் வந்தவர்தான் குமைனியும் என்பதை அவருடைய வார்த்தைகள் தெளிவுபடுத்துகிறது.

முஸ்லிம்கள் தங்களின் உயிரையும் விட மேலாக மதிக்கின்ற க∴பதுல்லாஹ் பற்றி குமைனியின் நிலைப்பாடு இதுதான்.

யா அல்லாஹ் இந்த நாசகாரக் கும்பலிலிருந்து எம் சமூகத்தைப் பாதுகாப்பாயாக.

குமைனியின் அபூர்வ சட்டங்கள்

தொழுகையில் தக்பீர் கட்டுவது தொழுகையை முறித்துவிடும்.

“தொழுகையை முறிக்கக்கூடியவை; ஒரு கையை மற்றையதில் ஷீஆக்கள் அல்லாதவர்கள் செய்வதைப்போன்று ஒரு கரத்தை மற்றையதில் வேண்டுமென்றே வைத்தால் தொழுகை முறிந்துவிடும். மறதியாக செய்தால் முறியாது, என்றாலும் மீட்டித் தொழுவதே பேணுதலாகும். தகிய்யாவுக்காக அப்படி செய்வதில் பிரச்சினையில்லை.” (தஹ்ரீருல் வஸீலா)

பித்தட்டில் புணர்தல்.

“மஸ்அலா 11: மனைவியின் பித்தட்டில் புணர்வது மக்ரூஹ் ஆனபோதிலும் அவ்வாறு செய்வது கூடும் இதுதான் பிரயல்யமான பலமான விடயமாகும். என்றாலும் குறிப்பாக மனைவி வெறுத்தால் அதை விட்டுவிடுவது மிகவும் பேணுதலாகும்.” (தஹ்ரீருல் வஸீலா)

ஆனால் இது தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்:
“மனைவியின் பித்தட்டில் புணர்ந்தவன் சபிக்கப்பட்டவனாவான்.” (அஹ்மத்)

சிறிய பிள்ளைகளுடன் குடும்பம் நடத்துதல்.

“மஸ்அலா 12: நிரந்தரத்திருமணமாக இருந்தாலும் தற்காலிகத் திருமணமாக இருந்தாலும் (முத்ஆ) மனைவி ஒன்பது வயது பூர்த்தி அடைவதற்கு முதல் உடலுறவில் ஈடுபட முடியாது. ஆனால் ஆசையுடன் தொடுதல், கட்டி அணைத்தல், தொடையில் இன்பம் அனுபவித்தல் போன்றவற்றில் பிரச்சினையில்லை. மனைவி பால்குடி பருவத்தில் இருக்கும்போதும் அவ்வாறு செய்யலாம்.” (தஹ்ரீருல் வஸீலா)

விபச்சாரியுடன் முத்ஆ.

மஸ்அலா18: “விபச்சாரியுடன் முத்ஆவில் ஈடுபடலாம் என்றாலும் அது மக்ரூஹாகும். குறிப்பாக விபச்சாரியென்று பிரபல்யம் அடைந்தவளாக, கண்டவர்களுடனெல்லாம் விபச்சாரத்தில் செய்பவளாக இருந்தால் அதிலிருந்து அவளைத் தடுக்க வேண்டும்.” (தஹ்ரீருல் வஸீலா)

அல்லாஹ் சொல்கிறான்: “விபச்சாரியை விபச்சாரம் செய்யக்கூடிய ஆண் அல்லது முஷ்ரிக்கைத் தவிர வேறு எவரும் திருமணம் செய்யமாட்டார்கள். மு.ஃ.மீன்கள் மீது (அவளைத் திருமணம்) செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.” (அத்தியாயம் அந்நூர்)

முத்ஆ செய்வதற்கு சாட்சியோ, தந்தையின் (வலியின்) அனுமதியோ தேவையில்லை:

ஷீஆக்களின் அறிஞரான தூசி என்பவருக்குரிய “நிஹாயா” என்ற நூலில் வந்திருக்கும் ஓர் அறிவிப்பை சுட்டிக்காட்டி குமைனி பின்வருமாறு சொல்கிறார்: “முத்ஆ செய்வதற்கு சாட்சிகளோ மற்றவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற அவசியமோ இல்லை. மேலும் முத்ஆவில் ஈடுபடும் ஆண் அந்தப் பெண்ணுக்கு கணவன் இருக்கிறானா? அல்லது இல்லையா? என்றும் கேட்க வேண்டிய அவசியமில்லை. மேலும் அந்தப் பெண்ணின் தந்தையின் அனுமதி இல்லாமலேயே அவளுடன் குடும்பம் நடத்தலாம்.” (தஹ்ரீருல் வஸீலா)

“முத்ஆவில் ஈடுபடும் பெண்ணுடன் இரவில் வரவேண்டும் என்றோ பகலில் வரவேண்டும் என்றோ நிபந்தனை வைத்துக்கொள்ளலாம் மேலும் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவை என்றும் நிபந்தனை போட்டுக்கொள்ளலாம்.” (தஹ்ரீருல் வஸீலா)

கப்ரடி மண்ணில் ஸுஜூது செய்தல்.

ஹுஸைன் (ரழி) அவர்களின் கப்ரடி மண்ணில் ஸுஜூது செய்வதே மிகவும் சிறந்தது (தஹ்ரீருல் வஸீலா)

நபியவர்கள் மக்கா, மதீனாவில்தான் வாழ்ந்தார்கள் அங்குதான் அவரது தொழுகையையும் நிறைவேற்றினார்கள். குமைனி சொல்லும் சிறப்பான ஸுஜூது செய்யும் வாய்பபு நபியவர்களுக்குக் கூட கிடைக்கவில்லை. அல்லாஹ் போதுமானவன.

மண்ணை உண்ணுதல்:

ஹுஸைன் (ரழி) அவர்களின் கப்ரடி மண் தவிர்ந்த வேறு எந்த மண்ணையும் உண்ணக் கூடாது.. (தஹ்ரீருல் வஸீலா)

இதுதான் ஷீஆக்களின் கொள்கை ஹுஸைன் (ரழி) அவர்களின் கப்ரடி மண்ணைக்கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை.

கப்றுகளை நோக்கித் தொழுதல்:

இமாம்களின் கப்றுகளுக்குப் பின்னால் வலப்புறமாகவோ அல்லது இடப்புறமாகவோ தொழுவதில் பிரச்சினையில்லை. ஆனால் அவர்களின் தலைக்கு நேராக நின்று தொழுவதுதான் சிறந்தது.'' (தஹ்ரீருல் வஸீலா)

கப்றுகளை நோக்கித் தொழுவது இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டது இதில் நபியவர்களின் கப்றை நோக்கிக்கூடத் தொழக்கூடாது என்பதும் முக்கியமானது.
‘‘நீங்கள் கப்றுகளின் மீதோ கப்றுகளை நோக்கியோ தொழவேண்டாம்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஜும்ஆத் தொழுகை.

“இந்தக் காலத்தில் ஜும்ஆ தொழுவதா? ளுஹர் தொழுவதா? என்பது தேர்வுக்குட்பட்ட விடயம். என்றாலும் ஜும்ஆ தொழுவது மிகவும் சிறந்தது, ளுஹர் தொழுவது மிகவும் பேணுதலானது,

இதை விடவும் பேணுதலானது ஜும்ஆ, ளுஹர் இரண்டையும் தொழுவது.'' (தஹ்ரீருல் வஸீலா)

ஷீஆக்களின் கருத்துப்படி அவர்களின் கடைசி இமாம் மஹ்தி வரும்வரை ஜும்ஆ கடமையில்லை. அவர்களின் மஹ்தி வரப்போவதுமில்லை. எனவே, ஜும்ஆ தொழுகை என்றொரு கடமை அவர்களிடமில்லை. அதை குமைனி இவ்வளவு சுற்றிவளைத்து சொல்கிறார்.

தொடக்காளியின் தொழுகை.

‘‘தொடக்குடன் உள்ளவர் ஜனாஸாத் தொழுகை தவிர்ந்த வேறு எந்தத் தொழுகையையும் நிறைவேற்ற முடியாது.'' (தஹ்ரீருல் வஸீலா)

ஜனாஸாத் தொழுகைக்கு வுழு அவசியமானது என்பது நமது சிறு பிள்ளைகளுக்கும் தெரிந்த விடயம். ஆனால் ஷீஆக்களின் ஆண்மீகத் தலைவருக்கு தெரியாமல் இருப்பது இங்கே கவனிக்க வேண்டிய விடயம்.

தொழுபவர் ஸலாத்துக்கு பதில் சொல்ல வேண்டும்:

‘‘ஒருவர் தொழுதுகொண்டிருக்கும் போது அவருக்கு ஸலாம் சொல்வதில் பிரச்சினையில்லை. மேலும் தொழுபவர் தொழுது கொண்டிருக்கும் நிலையில் அதற்கு பதில் சொல்வது கடமை.'' (தஹ்ரீருல் வஸீலா)

தொழுது கொண்டிருப்பவரின் முன்னால் கடந்து செல்வதைக் கூட இஸ்லாம் தடை செய்துள்ளது. அவ்வாறு செல்பவரை தடுக்குமாறு சொல்கிறது மீறி செல்பவருக்கு அடிக்குமாறு நபியவர்கள் சொல்கிறார்கள். இவ்வாறிருக்கையில் முஸ்லிம்களுக்கு முற்றிலும் முரண்பட்டிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் எவ்வாறெல்லாம் குமைனி சிந்தித்திருக்கிறார்...?

அல்லாஹ் எம் அனைவரையும் இத்தகைய
சிந்தனைகளிலிருந்து பாதுகாப்பானாக.

தொழுமிடம் நஜீஸாக இருக்கலாம்:

“தொழும் இடத்தில் நெற்றி வைக்கும் இடம் தவிர்ந்த மற்ற இடங்கள் நஜீஸாக இருப்பதில் பிரச்சினையில்லை. ஆனால் நெற்றி வைக்கும் இடம் சுத்தமாக இருப்பது அவசியமாகும்.” (தஹ்ரீருல் வஸீலா)

தொழுகையில் இடம் உடை உடல் என்பன சுத்தமாக இருப்பது அவசியமானது என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால், ஷீஆக்களின் தொழுகைக்கு இதெல்லாம் தேவையில் ஆக தொழுகை என்ற பெயரில் மற்றவர்களை ஏமாற்றும் ஒரு வேலைக்கே இவ்வாறான போதனைகள் ஷீஆக்கள் தூண்டப்படுகிறார்கள்.

நஜீஸை சுத்தப்படுத்திய நீர் சுத்தமானதுதான்.

“சிறுநீரோ, மலமோ கழித்துவிட்டு சுத்தம் செய்த நீர் சுத்தமானதும் பிறரை சுத்தப்படுத்தக்கூடிய தாஹிரான நீராகும்.” (தஹ்ரீருல் வஸீலா)

மரணித்தவர்கள், கற்கள் போன்றவற்றிடம் உதவி தேடலாம்.

குமைனி சொல்கிறார்: “மரணித்தவர்களிடம் உதவி தேடுவதும் தேவைகளை நிவர்த்திக்குமாறு வேண்டுவதும் இணைவைப்பு என்று சொல்லலாம். ஏனெனில் நபியவர்களும் இமாமும் வெறும் சடப்பொருள்தான் அவர்களால் எந்த நன்மையும் செய்ய முடியாது அதே போன்று எந்தத் தீமையும் செய்ய முடியாது.” இவ்வாறு சொன்னால். அதற்கு பின்வருமாறு பதில் சொல்ல முடியும்.

“இணைவைப்பு என்பது அல்லாஹ் அல்லாதவரிடம் அவர் அல்லாஹ் என்று நம்பி தேவைகளை நிறைவேற்றுமாறு வேண்டுவதாகும். அவ்வாறு நம்பாமல் அவர்களிடம் தேவைகளை கோருவது இணைவைப்பு அல்ல. இதில் உயிர் உள்ளவர். உயிரற்றவர் என்ற வேறுபாடுகள் இல்லை. எனவே, இதன்படி ஒருவர் கற்கள் போன்றவைகளிடம் தேவைகளை நிறைவேற்றுமாறு

கோருவது இணைவைப்பு அல்ல. ஆனாலும் அவர் ஒரு பாதிலான செயலைச் செய்கிறார்.” (கஷ்புல் அஸ்ரார்.)

ஷிர்க்குக்கு குமைனி சொல்லும் இந்த அற்புதமான வரைவிலக்கணத்தின் படி இந்த உலகத்தில் பெரும்பாண்மையானவர்கள் முஸ்லிம்களே மேலும் நபியவர்கள் வரும்போது இருந்த மக்கா வாசிகளும் முஸ்லிம்கள்தான். ஏனெனில் மக்காவாசிகள் சொன்னதாக அல்லாஹ் அல்குர்ஆனில் சொல்லும் போது பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

“அல்லாஹ்வை விட்டு விட்டு வேறு அவ்லியாக்களை எடுத்துக் கொண்டவர்கள் இவைகளை நாம் வணங்குவது அல்லாஹ்விடம் எங்களை இவை நெருக்கி வைக்கும் என்பதற்காகவே (என்று கூறுகிறார்கள்)” (அத்தியாயம் ஸுமர்:03). எனவே மக்கா வாசிகள் சிலைகளுக்கு வணக்கம் செலுத்தினாலும் அவைகளை அல்லாஹ் என்று நம்பி அவர்கள் வணங்கவில்லை. மாறாக அல்லாஹ்விடம் கொண்டு சேர்க்கும் என்றுதான் வணங்கினார்கள். குமைனியின் கருத்துப்படி இவ்வாறு வணக்கம் செய்த மக்கா வாசிகள் இணைவைப்பாளர்கள் அல்ல.

ஆனால், அல்குர்ஆன் அவர்களை காபிர்கள். இணைவைப்பாளர்கள் என்று சொல்கிறது. அப்படியென்றால் அல்குர்ஆனின் கருத்து தவறு என்று சொல்கிறார் குமைனி (அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக)

மக்காவாசிகள் இணைவைப்பாளர்கள் அல்ல என்ற நிலைக்கு குமைனியின் சிந்தனை சென்றிருக்கிறது. ஆனாலும் அவரை தங்களின் ஆன்மீகத் தலைவர் என்று ஏற்றுக்கொள்ளவும், போற்றவும் சிலர் தயாராகவே இருக்கிறார்கள்.

அல்லாஹ் போதுமானவன்.

குமைனி எனும் சர்வாதிகாரி.

உலகத்தில் யூதர்களைக் கொலை செய்ததற்காக ஹிட்லர் சர்வாதிகாரி என்றால் ஈரானில் அஹ்லுஸ்ஸுன்னாக்களைக் கொன்றொழித்ததற்காக குமைனியும் சர்வாதிகாரிதான்.

ஈரானில் மன்னர் ஷாவின் ஆட்சியில் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர் பெரும் அநியாயங்களை சந்தித்து வந்தார்கள் இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்ட குமைனி அஹ்லுஸ்ஸுன்னாக்களை தனக்கு ஆதரவாக திரட்டும் வகையில் தனது அறிக்கைகளை விட்டார். "இஸ்லாமிய அரசில் ஷீஆ, ஸுன்னா என்ற வேறுபாடு இருக்காது. அனைவருக்கும் சமத்துவம் வழங்கப்படும், அனைவருக்கும் சமமான நீதி கிடைக்கும்" என்றெல்லாம் பலமான வாக்குறுதிகளை வழங்கி புத்தகங்கள், ஒலி, ஒளி நாடாக்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் பரப்பினார். பெரும் இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருந்த முஸ்லிம்களுக்கு இது ஆறுதலாக இருந்தது. நமக்கு நல்ல விடிவு கிடைக்கப்போகிறது, நம்மைப் பாதுகாக்க ஒருவரை அல்லாஹ் கொண்டு வந்திருக்கிறான் என்று நினைத்தார்கள்.

குமைனியினதும் அவரது சகாக்களினதும் பொய்யான வாக்குறுதிகளை அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர் நம்பினர். அவரது புரட்சிக்கு ஆதரவளிக்க ஆரம்பித்தனர். அஹ்லுஸ்ஸுன்னாக்களின் ஆதரவு மாத்திரம் குமைனிக்கு இல்லையென்றால் அவரால் ஆட்சியை நினைத்தும் பார்த்திருக்க முடியாது என்று ஆய்வாளர்கள் கூறும் அளவுக்கு அஹ்லுஸ்ஸுன்னாக்கள் அவருக்கு ஆதரவு வழங்கினார்கள்.

ஆனால், குமைனி ஆட்சிக்கு வந்த பிறகுதான் ஈரானில் வாழ்ந்த அஹ்லுஸ்ஸுன்னாக்களுக்கு நாம் மண் குதிரையை நம்பி கடலில் இறங்கியிருக்கிறோம் என்பதும் சட்டியிலிருந்து அடுப்பில் வீழ்ந்திருக்கிறோம் என்பதும் தெரியவந்தது. ஆயிரக்கணக்கான

முஸ்லிம் அறிஞர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு இருந்த கட்சிகள் கலைக்கப்பட்டதுடன் அவர்களின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டன. முஸ்லிம்கள் முன்பிருந்ததை விடவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இவ்வாறான இன்னல்களையும் அபாயங்களையும் உணர்ந்த அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்கள் குழுவொன்று அஹ்மத் முப்தி ஸாதா தலைமையில் குமைனியை சந்திப்பதற்காக சென்றார்கள். வந்தவர்களை சந்திக்க நேரமில்லை என்று ஆரம்பத்தில் மறுத்துவிட்ட குமைனி, பின்பு திடீரென்று ஸலாம் சொல்லாமலும் அவர்கள் எவரையும் வரவேற்காமலும் கைலாகு கொடுக்காமலும் உள்ளே நுழைந்தார். ஆட்சி பீடம் ஏறுவதற்கு முதல் கட்டியணைத்து, கைலாகு கொடுத்த அந்த மனிதர்களிடம் பேசுவதற்குக் கூட குமைனிக்கு நேரமிருக்கவில்லை. தன் கனவு நிறைவேறியதும் உள்ளத்தில் மறைத்து வைத்திருந்தவை வெளிப்பட ஆரம்பித்தது.

குமைனியின் வந்ததும், கூடியிருந்த அறிஞர்கள் அவர் பழைய வாக்குறுதிகளையும் தற்போதைய நிலையையும் தெளிவுபடுத்தினார்கள். ஆனால், குமைனி இவை அனைத்திற்கும் ஒரே பதிலை சொன்னார்: "உங்களைப் போன்றவர்கள் கொலை செய்யப்பட்ட மலை தற்போதும் இருக்கிறது. எனக்கு நீங்கள் முரண்பட்டால் அந்த மலைக்கு நீங்களும் போவீர்கள். ஈரானில் உங்களில் எவரும் மீதமாக இருக்கமாட்டீர்கள்." என்று சொல்லி விட்டு எழுந்து சென்றுவிட்டார்.

அன்றிலிருந்து முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகளும், கொலைகளும் அதிகரித்த வண்ணமே இருந்தன. இன்றளவும் முஸ்லிம்கள் ஈரானின் தலைநகரம் தெஹ்ரானில் ஜமாஅத்தாக தொழ முடியாத ஒரு நிலை உள்ளது. அவர்களுக்கென்று தெஹ்ரானில் பள்ளிகள் இல்லை. ஜும்ஆத் தொழுகை நடாத்த முடியாது. ஆனால், மிகச் சிறுபான்மையாக வாழும் யூதர்களும் கிறிஸ்தவர்களும் சகல உரிமைகளும் பெற்று நிம்மதியாக வாழுகிறார்கள். அவர்களுக்கு தெஹ்ரானில் பல வணக்கஸ்தலங்கள் இருக்கிறன.

அல்லாஹு அக்பர். குமைனியின் சர்வாதிகாரம் எவ்வளவு வேர்விட்டுத் தழைத்திருக்கிறது பார்த்தீர்களா...? இவர்களின் உண்மை முகத்தை இனியாவது நாம் விளங்கக்கூடாதா..?

ஏமாற்றப்படுகிறார்கள்.

இலங்கைத் திருநாட்டிலே குமைனிக்காக விழா எடுக்கின்ற அவரின் புகழ்பாடுகின்ற அரபு, பாரசீக மொழிகளைப் படித்த ஷீஆக்கள் அவருடைய கொள்கைகளை அறிந்து அதை ஏற்றுக்கொண்டுதான் இவ்வாறு செய்கிறார்களா? என்பது எமக்குத் தெரியவில்லை.

ஆனால், குமைனியை பெரிதாகக் காட்டி சிலர் ஏமாற்றப்படுகிறார்கள் என்பது மாத்திரம் உண்மை. விடயம் தெரியாத அரசியல்வாதிகள், மார்க்கம் தெரியாத படித்த பாமரர்கள், ஈரானின் சுற்றுலாக் கவர்ச்சியில் வீழ்ந்தவர்கள், சில எழுத்தாளர்கள், சமகால முஸ்லிம்களின் நிலை பற்றிப் பேசுகின்ற சில சகோதரர்கள் என்று பலரும் இந்த விடயத்தில் ஏமாற்றப்படுகிறார்கள்.

உண்மையில் குமைனியின் இத்தகைய கருத்துக்கள் நாமாக இட்டுக்கட்டிச் சொன்னவை கிடையாது. அவரது நூற்களில் அவராகச் சொன்னவை, ஈரானில் அந்த நூல்கள் இப்போதும் அச்சிடப்படுகின்றன. அந்த நூல்களில் இருந்த செய்திகளைத்தான் நாம் இங்கே மொழிபெயர்த்துள்ளோம். ஆனாலும், அரபு மொழி தெரிந்த எமது உலமாக்கள் கூட இதில் ஏமாற்றப்பட்டிருப்பது ஆச்சரியமானதுதான். அதாவது, குமைனியைப் பற்றி இருந்த பொய்யான சித்தரிப்புக்களின் ஆதிக்கத்தினால் குமைனியின் நூல்களை வாசித்து அவர் என்ன சொல்கிறார்? என்பதைக் கூட தெரிந்துகொள்ள எங்கள் அறிஞர்களால் முடியாமல் போயிருக்கிறது.

தங்களைப் பற்றி மற்றவர்கள் பொய் சொல்வதாகவும் தங்கள் மீது இட்டுக்கட்டுவதாகவும் ஷீஆக்கள் பிரச்சாரம் செய்யும் இந்தக் காலத்திலும் குமைனியின் நூல்களை வாசிக்காமல் அவரது கருத்துக்களை அவரது நூல்களிலிருந்து தெரிந்துகொள்ளாமல் இருப்பது தானும் ஏமாந்து மற்றவர்களையும் ஏமாற்றுவதற்கு துணையாக அமைந்துவிடலாம்.

ஏமாறுபவர்கள் இருக்கும் காலமெல்லாம் ஏமாற்றுபவர்கள் இருந்துகொண்டே இருப்பார்கள். அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக!.

உள்ளத்தில் உள்ளதைவிட அதிகம்.

ஷீஆக்களிடம் தகிய்யா சிந்தனை பின்பற்றப்படுகிறது. அவர்களது எழுத்திலும் பேச்சிலும் அவர்களின் உள்ளங்களில் இருப்பதற்கு மாற்றமாக சொல்வதற்கு அவர்களது மதத்தின் படி அவர்களுக்கு முழு அனுமதி இருக்கிறது. முஸ்லிம்களுடன் இருக்கும் போது அப்படி நடந்துகொள்வது கடமை என்று சொல்கிறார்கள். "யாருக்கு நடிக்கத் தெரியாதோ அவன் ஷீஆ அல்ல" என்று சொல்பவர்கள் ஷீஆக்கள். அவர்களின் இறுதி மீட்பாளர் மஹ்தி (இஸ்லாம் சொல்லும் தஜ்ஜால்) வரும் வரை தகிய்யாவைப் பின்பற்றுவது ஷீஆக்களின் கடமை என்பது அவர்களின் கொள்கை. இதனால் அவர்களை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவது கடினம் என்று சொல்கிறார்கள் எமது இஸ்லாமிய அறிஞர்கள்..

நடித்துக்கொண்டே, தகிய்யா கொள்கையைப் பின்பற்றிக்கொண்டு குமைனி சொல்லியிருப்பது இவ்வளவு பாரதூரமானதாகவும், இஸ்லாத்தின் எந்தவொரு பெறுமானத்தையும் விட்டு வைக்காமல் தகர்த்தெறிவதாகவும் இருக்கிறது என்றால்.. அவர் தகிய்யா இல்லாம்ல இருந்தால் எவ்வளவு பாரதூரமானதாக இருக்கும். அல்லாஹ் தான் எம் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும்.

ஆலு இம்ரான் அத்தியாயம் 118ம் வசனத்தில் அல்லாஹ் சொல்கிறான் "நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் உங் (கள் மார்க்கத்தைச் சார்ந்தோர்) களைத் தவிர (வேறெவரையும்) உங்களின அந்தரங்கக் கூட்டாளிகளாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்: ஏனெனில் (பிறர்) உங்களுக்குத் தீமை செய்வதில் சிறிதும் குறைவு செய்ய மாட்டார்கள். நீங்கள் வருந்துவதை அவர்கள் விரும்புவார்கள், அவர்க்ள உங்கள் மேல் கொண்டுள்ள கடுமையான வெறுப்பு அவர்கள் வாய்களிலிருந்தே வெளியாகிவிட்டது, அவர்களின் நெஞ்சங்கள் மறைத்து வைத்திருப்பதோ இன்னும் அதிகமாகும், நிச்சயமாக நாம் (இது பற்றிய) அத்தாட்சிகளைத் தெளிவு படுத்திவிட்டோம், நீங்கள் உணர்வுடையோரானால் (இதை அறிந்து கொள்வீர்கள்.)"

அன்பான வேண்டுகோள்.

அன்புக்குரிய உலமாக்களே, அரபு மொழி தெரிந்தவர்களே, ஷீஆக்களின் பொய்யான பேச்சுக்களில் மயங்கி இனியும் சமூகத்தை அழிவில் தள்ளிவிடாமல் இருப்பதற்கும், சமூகத்தில் மேலும் ஷீஆக்கள் வலுப்பெறாமல் இருப்பதற்கும் குமைனியின் நூல்களை நீங்கள் வாசிப்பது காலத்தின் தேவையாக மாறியுள்ளது. ஒரு பாமர முஸ்லிம் கூட பிளையானது என்று சொல்லக்கூடிய கருத்துக்களையும், இஸ்லாத்திற்கு எதிரான பல கருத்துக்களையும் குமைனி கொண்டுள்ளார்.

இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான குமைனியின் கருத்துக்கள் கடல் போன்றது என்றால் நான் இங்கே தொகுத்திருப்பது அதில் ஒரு துளிதான். நீங்கள் செய்ய வேண்டிய பணிதான் இதில் மீதமாகவுள்ளது.

ஷீஆக்களை எதிர்ப்பவர்களை வஹாபிகள் என்றும், தீவிரவாதிகள் என்றும், அமெரிக்க இஸ்ரேலின் நிதியில் இயங்குபவர்கள் என்றும் ஷீஆக்கள் விமர்சித்து பொதுமக்களின் கவனங்களை திசைதிருப்பி விட்டு மறைந்துகொண்ட காலம் மலையேறிவிட்டது. இது ஷீஆக்களின் நூல்களைப் படித்து அவர்களின் உண்மை முகத்தை மக்களுக்குக் காட்டி முஸ்லிம்களின் ஈமானைப் பாதுகாக்கும் காலம். இதில் நீங்கள் தவறுவிட்டால் உங்கள் பிள்ளைகளே உங்களை திட்டும் என்பதை மறந்து விடாதீர்கள்.